www.tamilarangam.net

# சுவடு

SUVADU

A Tamil Monthly from Norway



**RAYA**
87 RUE DE COLOMBES
92600 ASNIE: :UR -
-SEINE ; FRA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐரோப்பியப் பத்திரிகைகள்!

### ஈழநாடு

42, Av.Louis Aragon,
93000 Bobigny,
FRANCE

### தமிழன்

16, Croham Road,
south Croydon,
Surrey CR2 7BA,
ENGLAND

### ஐரோப்பா முரசு

1, Alle Moliere B.No2,
95140 Garges Les Gonesse,
FRANCE

### தமிழ் ஏடு

Post fach 37,
3700 Spies
SWITZERLAND

### ஈழகேசரி

Moffat Road,
London E17 7EZ,
UK

இலங்கை சுதந்திரம் அடைந்து 45 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் சுதந்திரம் என்பது பெயரளவில் மாத்திரமே நடைமுறையில் உள்ளது. அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள பல தரப்பினரும் மனித உரிமைகளை மீறிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு செயற்படுவோரால் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர்.

இந்த மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு, இந்திய அரசு (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது), ஜேவிபியினர், விடுதலைப் புலிகள், முஸ்லிம் ஊர்காவற் படையினர், ஈபிஆர்எல்எஃப், மற்றும் கொழும்பு இயக்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கின்றன, ஈடுபட்டும் வருகின்றன. மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை புரியப்படும் கொடுமை இன்னும் தொடர்கிறது. இது தொடர்கதையாகவே உள்ளது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். இதில் எவரும் எக்காரணத்தைக் காட்டியும் பின்நிற்கக்கூடாது, முடியாது.

சகல அரசியற் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகல தரப்பு மனித உரிமை மீறல்களும் நிபந்தனையின்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்க வேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது.

www.tamilarangam.net

# நோர்வே தமிழரை திருப்பி அனுப்புகிறது!

நோர்வேயில் அரசியற்தஞ்சம் கோரிய ஐம்பது தமிழர்கள் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர் என 'க்ளஸ்ஸகாம்பன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. நீதி அமைச்சு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி தயாரிக்கப் பட்டுள்ளது. அகதி விண்ணப்பங்களதும், மேன்முறையீடுகளதும் நிராகரிப்பைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அச்செய்தி மேலும் கூறுகிறது.

1983முதல் இன்றுவரை ஒருலட்சம் பேரை இலங்கையின் உள்நாட்டு யுத்தம் பலியெடுத்தது எனவும், பல வன்முறைக் குழுக்கள் - சில அரசின் ஆதரவுடனும் - இயங்கும் இலங்கைக்கு அகதிகள் அனுப்பப் படுவது பாதுகாப்பற்றது எனவும் 'க்ளஸ்ஸகாம்பன்' செய்தி மேலும் கூறுகிறது.

அண்மையில் (ஒரு மாதம் முன்னதாக) அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்துடன், நோர்வே அரசு தொடர்பு கொண்டதாகவும், அப்போது நிகழ்ந்த பேச்சுகளின் அடிப்படையிலேயே திருப்பி அனுப்பல்கள் நிகழ உள்ளதாகவும் நீதியமைச்சின் அதிகாரி கூறியுள்ளார். அகதிகள் திருப்பி அனுப்பப்படும் போதும், அகதிகளுக்கான ஐ.நா. அமைப்புடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், திருப்பி அனுப்பல் விரைவில் ஆரம்பமாகும் எனவும் அவர் கூறினார். திருப்பி அனுப்பப் படுவோர் கொழும்புக்கே அனுப்பப்பட உள்ளதாகவும், கொழும்பு பாதுகாப்பானது என்றே நோர்வே அரசு கருதுவதாகவும் அவர் 'க்ளஸ்ஸ்காம்பனி'டம் கூறியுள்ளார்.

அரசியற் தஞ்சம் கோருவோருக்கான நோர்வேஜிய அமைப்பு (NOAS) இந்நடவடிக்கையைக் கடுமையாக எதிர்த்துள்ளது. அதன் தலைவி அன்னத்த தொம்ஸன் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "நாடு திரும்ப உள்ளோருக்கு, அவர்கள் கைது செய்யப்படும் பட்சத்தில் தொடர்புகொள்ள ஒரு தொலைபேசி இலக்கம் வழங்கப்பட உள்ளதாக நீதி அமைச்சு கூறுகிறது. ஆனால் ஒருவர் கைது செய்யப் பட்டால் அவர் தொலைபேசியைப் பாவிக்க அனுமதிக்கப்பட மாட்டார். இதுபற்றி, அகதிகளுக்கான ஐ.நா. அமைப்புடன் 'நோவாஸ்' தொடர்பு கொண்டு, அகதிகளது ஆபத்தான நிலையை விளக்கும்" எனக் கூறினார்.

**சாகுந்தலன்**

---


## SAAMA

இலங்கையில் இனப்பிரச்சனை தொடர்பான படைப்புகளைத் தாங்கி ஆங்கிலத்தில் வெளிவருகிறது 'சாம'. இலங்கையில் அமைதி, ஜனநாயகம், நீதி என்பன நிலைப்பதில் ஆர்வம் கொண்ட சிலரது வெளியீடு. பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இந்த வெளியீடு வாசகர்களது பலதரப்பட்ட பங்களிப்பை வரவேற்கிறது.

தொடர்புகள்: SAAMA EDITORIAL COLLECTIVE, BM BOX 3018, LONDON WC1N 3XX, UK

www.tamilarangam.net



# சிறுவர் கல்வியும் ஆண்டு நிறைவும்!

அண்மையில் அன்னை பூபதி கலைக்கூடம் தனது முதலாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. ஒஸ்லோவில் கடந்த ஒரு வருடமாக இயங்கிவரும் இந்தக் கலைக்கூடம் தனது நிகழ்ச்சியை வழமைக்கு மாறாகச் சரியான நேரத்தில் ஆரம்பித்தது ஒரு வரவேற்கத்தக்க அம்சம்.

சிறுவர்களட பாடல், நடனங்கள், நாடகம் என விழா சிறப்பாக ஆரம்பித்தது. எல்லாச் சிறுவர்களும் பங்கேற்கும் வகையில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் தயாரிக்கப் பட்டிருந்தன. பொதுவாகச் சிறுவர்கள் நிகழ்ச்சிகளில் சிறுவர்களைப் பங்கேற்க வைக்கச் செய்வது ஒரு முக்கிய அம்சம் என்பதை நிகழ்ச்சி தயாரித்தவர்கள் கவனத்தில் எடுத்திருந்தமை ஒரு நல்ல விடயமாகப் பட்டது. இந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர்கள் பாராட்டுக்குரியவர்களே.

'எந்தையும் தாயும்', நமது மக்களது தற்போதைய வாழ்க்கை பற்றிச் சித்தரிக்கும் ஒரு நாடகம்; உண்மை நிலையைச் சித்தரிக்கிறது.

இது இன்று ஈழத்தின் தலைசிறந்த நாடக எழுத்தாளராக விளங்கும் குழந்தை சண்முகலிங்கத்தினுடையது. இலங்கையில் நாடக அரங்கக் கல்லூரி தயாரித்துப் பெரும் வரவேற்புப் பெற்ற சிறந்த நாடகம். இங்கு மீள்தயாரிப்புச் செய்யப் பட்டது.

இன்றைய யாழ்ப்பாணத்தில் வயோதிபர் ஒருவர், தனது பதினொரு பிள்ளைகளையும் வெளிநாடு செல்லவிட்டு, அவர்கள் மணமாகி பிள்ளைபெற்று வாழ அவர்களை நேரடியாகச் சந்திக்க முடியாமல் ஏக்கத்தில் வாடுவதும் அவர்களின் கடிதங்களுக்காகத் தவம் கிடப்பதும்தாடு மேடைக்கரு. தனது பிள்ளைகளைச் சந்திக்க முடியாமல், அவர்கள் தனது ஈமக்கிரியைகளையாவது செய்ய வருவார்களா என்ற ஏக்கத்துடன் நாட்களைக் கடத்துகிறார் முதியவர். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என ஏராளமாக இருப்பினும் அவரை அயலவர்கள், சொந்தத்தினர்தான் பராமரிக்கின்றனர். இது இன்றைய யதார்த்தம். பல்லாயிரம் பெற்றோர் தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு ஏங்கும் ஏக்கப் பெருமூச்சே நாட்டை எரித்திடப் போதும். ஒருசில பாத்திரங்கள் மூலம் எளிமையான மேடை அமைப்பில் இது சொல்லப் பட்டது. இது நாடகாசிரியரது வெற்றியைக் காட்டுகிறது.

நாடகத்தின் முடிவில் நடிகர்கள் தமக்குள் பேசிக்கொள்வது போன்ற தோற்றம் தந்ததும், ஒலி அமைப்பில் இருந்த குறைபாடும் நாடகத்தின் வெற்றிக்குத் தடைக்கற்கள் என்றே கூறவேண்டும். ஒலி அமைப்பில் பொதுவாகவே நிலவும் குறைபாடுகளைக் களைந்து மேடையேற்றப் பட்டால் நல்ல மேடையேற்றமாக இது விளங்கும்.

அன்னை பூபதி கலைக்கூடம் மிக நல்ல வளர்ச்சியைக் கொண்டு விளங்குகிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சி நல்ல சாட்சியாக உள்ளது. நிகழ்ச்சியில் சில குறைகள் உள்ளன. இவ்வாறான குறைகள் நீக்கப்படும் என எதிர்காலத்தை நம்பலாம். உதாரணமாக நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்புரை இல்லாதது ஒரு குறையாகத் தெரிந்தது.

**செந்தில்**

www.tamilarangam.net

# அடப் பெண்ணே!

மதி


வருடாந்தம் மார்ச் மாதம் எட்டாம் நாள் முக்கியமான தினம்; இது பெண்களது சிறப்பிற்கும் உரிமைக்குமான தினம். இந்தத் தினம் பற்றி இலங்கையில், அதிலும் குறிப்பாகத் தமிழரிடையே அதிகமாக அறியப்படாமல் இருப்பது கவலைக்குரிய ஒரு விடயம். குறிப்பாகப் பெண்களே இதுபற்றி அதிகம் அறியாமல் இருப்பது வேதனை தரக்கூடிய ஒன்று.

பல ஆயிரம் வருடங்கள் பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக, உரிமைகள் அற்றவர்களாக, ஆண்களின் அடிமைகளாக நடத்தி வருகிறது சமூகம். இதற்கு எந்த நாடும் விதிவிலக்கல்ல. காலத்துக்குக் காலம் தமக்குரிய இடத்திற்காகப் பெண்கள் போராடியே வந்துள்ளனர்.

உலகிலேயே முதன்முதலாகப் பெண்கள் சமஉரிமை உடையவர்கள் என்று சட்டமூலம் அங்கீகாரம் வழங்கியது சோவியத் யூனியனில்தான். லெனின் வழிகாட்டலில் நிகழ்ந்த மக்கள் புரட்சி இதைச் சாத்தியம் ஆக்கிற்று. 1910இல் மார்ச் எட்டாம் திகதி லெனினின் துணைவியார் நடீஷா குருப்ஸ்கயாவினால் சோவியத்தில் பெண்கள் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து உலகம் முழுவதும் இத்தினம் பெண்கள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சோவியத் யூனியனில் (முன்பு ரஷ்யப் பேரரசில்) ஜார் மன்னனின் ஆட்சிக் காலத்தில் பலத்த போராட்டத்தின் பின்னர் 1860ஆம் ஆண்டு, முதன்முதலாக மத்திய வகுப்புவரை பாடசாலைக் கல்வியைப் பெறும் உரிமையைப் பெண்கள் ஈட்டினர். பெண்கள் தமது உரிமைகளுக்காகப் போராடிய போதெல்லாம் கொடூரமாக ஒடுக்கப் பட்டனர்.

இதே காலத்தில் கார்ள் மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின் போன்றோர் இவர்களது



www.tamilarangam.net

## மார்ச் எட்டாம் நாள்!

உரிமைப் போராட்டத்தை ஆதரித்தனர். சோவியத் புரட்சியின் பின்னர் பெண்களது உரிமைகள் சட்டரீதியாகவும் சமூகரீதியாகவும் உறுதிசெய்யப்பட்ட பின்னர், பெண்கள் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டதுடன் ஏனைய நாடுகளில் இல்லாதளவு பல அரிய சாதனைகளையும் நிலைநாட்டினர். சோவியத் புரட்சியைத் தொடர்ந்து பெண்கள் சமஉரிமை மையத்தின் பேச்சாளராக இருந்த அலெக்ஸாண்டரா கொலன்ராஜ், 1915இல் ஒஸ்லோவில் முதன்முதல் நிகழ்ந்த பெண்கள் தினத்தில் பங்கேற்று உரையாற்றினார்.

சமஉரிமை உறுதிப்படுத்தப் பட்டபின்னர் பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள் உடனடியாக அமைக்கப் பட்டதுடன், பெண்கள் நலன்காக்கும் அமைப்புகளும் உருவாக்கப் பட்டதால் பெண்கள் வெளியே சென்று தொழில்புரியும் நிலை இலகுவானது. இதற்காகக் கொம்யூனிஸ்ற் கட்சி சிறப்பாகப் பணியாற்றியது. லெனின் தலைமையில் சோவியத் பெண்களது வாழ்வு விரைவில் மேம்பட்டமை பற்றி இன்றும் மேற்கத்தையப் பத்திரிகைகள்கூட வியந்து எழுதுகின்றன.

லெனினின் மறைவுக்குப் பின் ஸ்டாலின் காலத்தில் பெண்களது நிலை மீண்டும் இறங்குதிசையாயிற்று. சமத்துவம் வாயளவில் ஆயிற்று. பெண்ணானவள் 'முதலும் கடைசியுமாக தாயாவாள்' என்ற சுலோகம் பரவலாக முன்வைக்கப் பட்டது. அதிகாரத்திற்குள்ளும் வெளியிலும் இருந்த ஆண்களை இது திருப்திப் படுத்தியது. உலகின் முதல் பெண் ராஜதந்திரத் தூதராக (நோர்வேயில்) பணியாற்றிய அலெக்ஸாண்டரா கொலன்ராஜ் பதவியை இழந்தார். சட்டம் மேலும் மேலும் பெண்களுக்கு எதிரானதாக நடைமுறையில் உருவெடுத்தது.

லெனின்கிராட்டில் இருந்து வெளிவந்த பெண்கள் சஞ்சிகையான 'அல்மனக்' **(Almanakk)**, 1979இல் கேஜிபியின் கடைக்கண் பார்வைக்குள் சிக்கியதால் அதோடு தொடர்பான பல பெண்கள் கைதாகிச் சிறைவாசம் பெற்றனர். பலர் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடினர். ஆயினும் பெண்களைப் பல தொழில்களில் இருந்து வெளியேற்றி வீட்டினுள் முடக்குவது இலகுவான காரியமாக இருக்கவில்லை. ஏனெனில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடர்ந்து நிகழ்ந்த புரட்சிகளாலும், அடுத்தடுத்து வந்த உலக யுத்தங்களாலும் பெருமளவு ஆண்கள் உயிரிழந்திருந்தமையால், ஆண்களின் தொகை கணிசமாக வீழ்ச்சியுற்றுப் பல தொழில்களில் பெண்களை இணைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

இன்றும் உலகில் மதிப்புமிக்க தொழிலாகக் கொள்ளப்படுவது வைத்தியத் தொழில். இத்தொழில் புரிவோருக்கு நல்ல வருவாயும் உண்டு. ரஷ்யாவில் மருத்துவர்களாக 80% பெண்களே பணிபுரிந்த போதும் மிகக் குறைந்த வருவாயையே இவர்கள் பெறுகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க தம்மைப்

www.tamilarangam.net

பிரபலப்படுத்திக் கொண்டு, முன்னுக்கு வந்த கொர்பச்சேவின் பெரஸ்ரோய்க்காவும், கிளாஸ்நொஸ்ற்றும் போன்ற மறுசீரமைப்புத் திட்டங்களால் பெண்களது நிலை இன்னும் கீழிறங்கியது. குறிப்பாகப் பெரிய பதவிகளிலும் அரசியலிலும் ஈடுபட்ட பெண்களின் தொகை மூன்றுநான்கு வருடங்களில் பாதியாகக் குறைந்தது. அத்துடன் பலலட்சம் சாதாரண பெண்கள் புதிய சந்தைப் பொருளாதாரத் திட்டங்களால் வேலை இழந்தனர். அரசு குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களை இழுத்து மூடியதால் பெண்கள் வேலைக்குச் செல்வது கடினமாகியுள்ளது. தொழிற்சாலைகள் தனியார்மயப் படுத்தப் படுவதால், புதிய நிர்வாகத்தினர் பெண்களை வேலைக்கு அமர்த்தாமற் தவிர்த்து வருகின்றனர். காரணம் பெண்களை வேலைக்கு அமர்த்துவதால் பேறுகால விடுமுறை மற்றும் கொடுப்பனவுகள் செலவுகளை ஏற்படுத்தும் என்ற அச்சமே.

அண்மையில் ரஷ்யத் தொழில் அமைச்சர், "இன்று வேலையில்லாப் பிரச்சனை மிகப்பெரும் பிரச்சனையாக உள்ளது. எனவே ஆண்கள் வேலையற்று உள்ளபோது பெண்களுக்கு வேலை வழங்க முடியுமா? பெண்கள் வீட்டில் இருந்து தமது குழந்தைகளைப் பராமரிக்க ஆண்கள் வேலைக்குப் போவது நல்லது" என்று கூறியமை பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ரஷ்யாவில் பாரம்பரியமான ஆண்கள் தொழில்களில் பெண்கள் புகுந்து சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். ஆனால் ஆண்களோ பாரம்பரியமாகப் பெண்கள் செய்த தொழில்களைத் திரும்பியும் பார்க்க மறுக்கிறார்கள்.

இன்று பல ஆயிரம் வயோதிப, சிறுவர், பெண்கள் வேலை வாய்ப்புகள் அற்ற நிலையில் வருமானமற்றுப் பல முக்கிய நகரங்களின் தெருக்களில் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை நாளுக்குநாள் மோசமாகி வருகிறது.

மகத்தான சோவியத் புரட்சியே இன்று, மேற்குலகில் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்க முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. பலர் சோவியத்தில் நிகழ்ந்த புரட்சிக் காலமும் அதைத் தொடர்ந்துவந்த லெனின் ஆட்சிக்காலமும் பெண்களுக்கான மறுமலர்ச்சிக் காலம் என்பர். நமதுநாட்டுப் பெண்களின் நிலை எப்படி? ●


**ஈழத்தமிழர்களால் அவ்வளவாக அறியப்படவில்லை**

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக (யாழ்) ஆசிரியர்களது அறிக்கை ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. இது, கடந்த காலங்களில் வெளிவந்த அறிக்கைகளின் சாராம்சமாகவும், சுருக்கத் தொகுப்பாகவும் வெளிவந்துள்ளது. அழகிய முறையில் பிரிட்டனில் மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்த நூலின் விலை இருபது குறோணர்கள்.

மனித உரிமைக்கான பல்கலைக்கழக (யாழ்) ஆசிரியர்களது முதலாவது தமிழ் அறிக்கை வெளிவந்துள்ளது. 'மனித உரிமையும் எமது போராட்டமும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூலின் விலை முப்பது குறோணர்கள்.

இந்நூல்களைப் பெறவிரும்புவோர் தயவுசெய்து பணப்பெறுமதிக்குரிய முத்திரைகளை அனுப்பிப் பெறலாம். குறித்தளவு பிரதிகளே உள்ளதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

**Suvadugal, Herslebs Gt 43, 0578 Oslo.**


www.tamilarangam.net

<u>விருதுகளின் காலம்!</u>

1992ஆம் ஆண்டுக்கான பாரதீய ஞானபீடப் பரிசு (இந்தியாவின் நோபல் பரிசு) நரேஷ் மேத்தா என்ற இந்திக் கவிஞருக்குக் கிடைத்துள்ளது. இந்தியில் ஏற்கனவே நான்குபேர் ஞானபீடப் பரிசைப் பெற்றுள்ளனர். நரேஷ் மேத்தா ஐந்தாவது ஆள். 1922இல் மால்வா என்னுமிடத்தில் பிறந்த நரேஷ் மேத்தா படித்ததெல்லாம் பனாரஸில். படித்து முடித்தவுடன் அலகாபாத்தில் அடைக்கலம். பின்பு கவிதை, நாவல் என்று படைப்புகளுடன் ஐக்கியம்.

இவருடைய முதல் கவிதைத் தொகுப்பான 'வான்பஹி சுனோ'வில், மக்களின் அவலங்களையும், மாறிவரும் உலகில் மனிதனின் மதிப்பீடுகள் சிதைந்து வருவதையும் பதிவு செய்திருக்கிறார்.

ஆனால் அடிப்படையில் வைணத் தத்துவவாதியான நரேஷ், பின்பு தனது படைப்புகளில் வேதம், உபநிஷதம், மந்திரம்



நரேஷ் மேத்தா

போன்றவற்றை பெருமளவில் பயன்படுத்தினார். வைணக் கருத்துகள் சரியென தன் கதாபாத்திரங்களின் மூலம் வாதிட்டார்.

(சென்ற 1991க்கான ஞானபீடப் பரிசு சுபாஷ் முகோபாத்தியாய என்ற வங்கக்

குழுமியிருந்தனர். ஏன்? எதற்கு? காரணமில்லாமல் காரியமா? "இந்திய புதிய தலைமுறை எழுத்து" என்பது பற்றி ஒரு கருத்தரங்கம். ஏற்பாடு - சாகித்திய அகாடமியினர்.

இந்தக் கருந்தரங்குகளில் பெரும்பாலும் எல்லா அமர்வுகளுமே இந்தியிலேயே நடைபெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டிலிருந்து சென்றிருந்த நாடகாசிரியர் ஞாநி, ஜெயமோகன், கவிஞர் சுகுமாரன், திலீப்குமார் ஒன்றும் விளங்காமல் 'ஙே' என்று விழித்துக் கொண்டிருந்தது பரிதாபமான ஒன்றுதான். (யாருக்கும் இந்தமாதிரி ஒருநிலை வரக்கூடாது) துருதுருவென்றிருந்த மனசையும், கையையும் அடக்கிக் கொண்டிருந்த ஞாநி, நாடகம் சம்பந்தமான அமர்வு - தன்னுடைய முறை - வந்தவுடன், "வணக்கம். நான் தமிழர்களின் சார்பாக வந்திருக்கிறேன். இங்கு கருத்துப் பரிமாற்றம்தான் முக்கியம். மொழி அல்ல. அதற்கு இந்தி தடையாக

www.tamilarangam.net

# தமிழக தபால்

கவிஞருக்குக் கிடைத்தது. சுபாஷ் இடதுசாரி அரசியல் கருத்துகளைத் தனது படைப்புகளில் பதிவு செய்தவர். பரிசு கிடைக்கவில்லை. கடைசியில் சுபாஷ், இந்திரா காங்கிரஸில் சேர்ந்ததும் சோராதுமாக ஒரு நிலையெடுத்து தேர்தல் பிரச்சாரமெல்லாம் செய்தபிறகுதான் '91இல் ஞானபீடம் கிடைத்தது என்பது சுவாரஸ்யமான விஷயம்)

எது எப்படியிருந்து என்ன? இந்தியாவில் இது விருதுகளின் காலம். அரசுகள், கட்சிகள், பொதுநல அமைப்புகள், இசைச்சபாக்கள், சினிமாக்காரர்கள் என்று அனைவரும் தமக்கு ஆதரவானவர்களுக்கு விருது வழங்கி, தோளைத் தட்டிக் கொடுத்துக் கொள்கின்றனர். அவ்வகையில் நரேஷ் மேத்தா மத்திய அரசுக்கு ரொம்பவும் கடமைப் பட்டவர்.

## இலக்கியத்திலும் இந்தித் திணிப்பு!

பிப்ரவரி 19முதல் 23 வரையில் டெல்லியில், இந்தியாவின் அனைத்து மாநில இலக்கியவாதிகளும்

உள்ளது. இந்தி என்மேல் திணிக்கப் பட்டுள்ளது. இந்தியைப் படிக்கவேண்டும் என்று என்னை யாரும் இம்மாதிரியான முறையால் கட்டாயப்படுத்த முடியாது. அதை எதிர்த்து நான் கடுமையாகப் போராடுவேன். இந்தி ஒரு கலாசார வன்முறையாக உள்ளது...." என்று இரண்டு நிமிடம் தமிழிலேயே பேசியிருக்கிறார். இந்திக்காரர்கள் விழித்த

விழி, பரிதாபமாக இருந்ததாம். பின்பு தான் தமிழில் பேசியதை ஆங்கிலத்தில் சொன்னவுடன், இந்தி இலக்கியவாதிகள் எழுந்து ஆட்சேபனையும் தெரிவித்துள்ளனர். ஆனால் ஞானியிடம் அவர்களின் ஜம்பம் பலிக்கவில்லை.

இதேபோன்று ஜெயமோகனும் மொழித்தகராறு செய்து, சிறிது சலனத்தை உண்டாக்கி யிருக்கிறார். "தமிழர்கள்

எப்போதுமே இப்படித்தான். இந்தியைப் படிக்க மாட்டோம்னு இங்கு வந்தும் சண்டை போடுகிறார்களே!" என்று இந்தியில் கத்தியிருக்கிறார்கள்.

www.tamilarangam.net



எல்.கணேசனின் முயற்சியில் "லட்சியப் பாதை" என்ற இதழைத் தொடக்கி - கருணாநிதி படமே இல்லாத ஒரு வார இதழை - நடத்தி வருகின்றனர். இரண்டு இதழ்களுமே இங்குள்ள வெகுஜன இதழ்களோடு போட்டியிடும் எந்தச் சாரமும் இன்றி, ஈனமான குரலில் மௌனச் சண்டையிட்டு வருகின்றன.

இளைய சூரியனின் வேலை - மு.க.ஸ்டாலினை தலைவர் நிலைக்கு உயர்த்துவது

லட்சியப் பாதையின் வேலை - வை.கோ.வை, கருணாநிதிக்கு இணையான தலைவராக உருவாக்குவது.

இதில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது பணபலத்திலேயே தங்கியுள்ளபடியால், முதல் ரவுண்டில் ஸ்டாலின் உருவம் பெரிதாகக் 'காட்டப்பட்டு' வருகிறது. ஆனால் ஸ்டாலின் சூரியனின் நிழல்தான். இளைய சூரியனல்ல.

## இளைய சூரியன் Vs லட்சியப் பாதை

பத்திரிகைகளுக்கு வை.கோபாலசாமி எம்.பி., ஒரு விற்பனைப் பண்டம். இவரைப்பற்றி வராத பத்திரிகைகள் தமிழில் இப்போது இல்லை. "வை.கோ" என்ற எழுத்தைப் பார்த்தவுடனேயே வாசகன் பரவசப்பட்டு அச்செய்தியைப் படிக்கிறான் என்பது கோபாலபுரத்தாருக்கு சிறிதும்

## கனவுகளைச் சுமக்கும் நடிகர்கள்!

தமிழ் நடிகர்களை இன்று ஒரு நோய் படாதபாடு படுத்தி வருகிறது.தமிழ் நடிகர்கள்தான் இப்படி என்றால், இவர்களுடைய ரசிக கே(ா)டிகளுக்கு நோய் முற்றிய நிலையில் உள்ளது. அதுவேறு ஒன்றும் அல்ல. முதலமைச்சர்

ஆசைதான்! நாலு படத்தில் நடித்து வெற்றி பெற்றுவிட்டால், நடிகருக்கு, முதலமைச்சருக்குரிய நாற்காலி கண்முன் தெரிய ஆரம்பித்து விடுகிறது. அப்புறம் எல்லா சுவரொட்டிகளிலும் "வருங்கால முதலமைச்சரே வருக வருக" மயம்தான். தமிழ்நாட்டில் இந்தக் கருத்தியல் வளர்ந்து வரும்போது, கேரளத்துக் காரர்கள் சும்மா இருக்க முடியுமா? இதை எப்படிக் காசாக்குவது என்று யோசித்தனர். விளைவு 'எஜமான்' விளம்பரத்தைப் பாருங்கள்.

"முதலமைச்சர் ஆகிறார் ரஜனிகாந்த்" என்பதுதான் விளம்பரத்தின் கொட்டை எழுத்து வாக்கியம். இந்த டெக்னிக்கை தமிழ் விநியோகஸ்தர்கள்கூட கடைப்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, நடிகர்களை நாம் ஏன் முதலமைச்சர் ஆக்கவேண்டும் என்பது. மற்றொன்று விநியோகஸ்தர்களுக்கும் முதலமைச்சர் ஆக ஆசை இருக்குமோ என்பது!

விருப்பம் இல்லாதது. தனது அருந்தவப் புதல்வன் ஸ்டாலினை மிஞ்சி ஒருவருக்குக் கைதட்டலா? வரவேற்பா? பல இரவுகள் கருணாநிதியும், மாறனும் தூங்காமல் இருந்திருப்பார்கள் போலும். தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் வை.கோ.வை தலையில் தூக்கிவைத்து,

அவருக்கென்று ஒரு இமேஜை உருவாக்கி வருவதைத் தடுக்க, இளைய சூரியன் என்ற வார இதழ் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் கோபாலபுரத்து குடும்பத்தினர். ஊழலை நிறுவனப் படுத்திய இவர்கள் ஜெ.யின் ஊழலை பக்கம் பக்கமாக எழுதுவதை, மக்கள் ரசிக்கத் தயாராயில்லை. மாவட்டச் செயலாளர்களின் தலையில் இதழைக் கட்டி, (இளைய சூரியன்) வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

கருணாநிதியின் தந்திர மூளையை நன்கு அறிந்த வை.கோ.அணியினர் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கினர். வை.கோ.வின் அரசியல் ஆசானாகிய

மரணத்தைத் தழுவிய மனிதாபிமானம்!

இந்தியாவின் சம்பல் பள்ளத்தாக்கை ஒரு காலத்தில் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்த கொள்ளைக்காரி பூலான்தேவி பற்றி 'சுவடுகள்' வாசகர்கள் அறிந்திருப்பார்கள். 1983 பிப்ரவரி 14இல் மத்திய பிரதேச அரசிடம் சரணடைந்த இவரைப்பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்



**BITTER EXPERIENCE.** Phoolan

www.tamilarangam.net



ஒன்று! தற்போது பூலான்தேவி குவாலியரில் தனிமைச் சிறையில் இருக்கிறார். இவருக்கு ஒருமுறை அதிகமான இரத்தப் போக்கு இருந்திருக்கிறது. இதைத் தடுக்க மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார். சாதாரண ரத்தப் போக்குக்கு ஆபரேஷன் செய்திருக்கிறார்கள். என்ன ஆபரேஷன் தெரியுமா? மருத்துவர் வேடத்தில் இருந்த கொலைகாரர்கள் பூலானின் கருப்பையையே எடுத்து விட்டார்கள். இதையறிந்து அழுது, துவண்ட பூலானின் அழுகுரல்கள் சிறைச்சாலையின் மதில் சுவர்களைக் கடந்துவர பல மாதங்களாகி விட்டன. செய்தியாளர்கள், "அந்த ஆபரேஷன் நியாயமானதுதானா?" என்று கோபத்துடன் கேட்டிருக்கின்றனர். அதற்கு அவர் "மற்றொரு பூலான்தேவியோ, பூலான்மகனோ பிறப்பதை நாங்கள் விரும்பவில்லை" என்று இறுமாப்புடன் கூறியிருக்கிறார். சமூகசேவை நிறுவனங்கள் சில கண்டனம் செய்து அடங்கிவிட்டன. ஆனால் அரசியல் கட்சிகள்......? காந்தியக் குரங்காக கண், காது, வாய் ஆகியனவற்றைப் பொத்திக்கொண்டு கம்மென்றிருக்கின்றன.

**— அதியமான் —**

## கறுப்புப் பரிசு

கடந்த வருடம் (1992) பாவ்ல் றோப்சன் (Paul Robeson) பரிசு யான் கார்பறெக்கிற்கு (Jan Garbarek) வழங்கப் பட்டுள்ளது.

பாவ்ல் றொபின்சன் பரிசு நோர்வே இனவாத எதிர்ப்பு மையத்தினால் வருடாந்தம் கலைஞர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் பரிசாகும். 1986முதல் இப்பரிசு வழங்கப் படுகிறது. 'பல்லினக் கலாசாரத்திற்கும், விருத்திக்கும்' சிறப்பான பங்காற்றியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏனைய பரிசுகள் போல இது பணப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டதல்ல. கௌரவத்திற்காகவே வழங்கப் படுவதாகும்.

பாவ்ல் றொப்சன் 1886இலிருந்து 1978வரை அமெரிக்காவில் வாழ்ந்த கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய முக்கிய போராளியாவார்.

- தூதுவன் -

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• ஈழவாணன்.

# தொலைந்துபோன தேசம் பற்றி...



மார்ச் மாதம் இரு முக்கிய அரசியல் நிகழ்வுகள் இலங்கையில் நிகழ்ந்தன. இவை இனப்பிரச்சனையைத் தீர்க்க (?) பிரேமதாசாவால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவுகளும், பிரேமதாசா எதிர்பாராமல் அறிவித்த மாகாணசபைக் கலைப்புகளுமாகும்.

## பாராளுமன்றத் தெரிவுக்குழு

தமிழர்களைப் பொறுத்தவரை முக்கியம் என்று கருதப்படக் கூடியது, தெரிவுக்குழுவின் முடிவுகளே. மார்ச் நடுப்பகுதியில் வெளிவந்த தெரிவுக்குழு முடிவுகள், தமிழர்கள் முன்பே எதிர்பார்த்தது போன்று தெரிவுக்குழு வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே என நிரூபித்தன. பெரும்பான்மைச் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில், தமிழ், முஸ்லிம் மக்களைப்பற்றிக் கவலைப் படாமல், இனவாத முடிவுகள் அழகான தட்டுகளில் போடப்பட்டுத் தமிழர்களுக்காகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

சர்வதேச ரீதியாக பிரேமதாசா அரசுக்கு எதிராக மனித உரிமைமீறல் குற்றச் சாட்டுகளுக்கும், மற்றும் இனப்பிரச்சனை தொடர்பாக ஐ.தே.க. அரசின் இழுத்தடிப்பும், இனஅழிப்பும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் ஏற்படுத்திய 'முகஞ்சுழிப்'பிற்கும் தாக்குப் பிடிக்கவும், பிரேமதாசா கண்டுபிடித்த காலங்கடத்தல் உத்திதான் 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' ஆகும்.

இதில் மிக வேடிக்கையான விடயம் என்ன என்றால், எல்லாக் கட்சிகளும்

www.tamilarangam.net

தமது 'அரசியல் தீர்வைச் சமர்ப்பிக்கும்படி உருக்கமாக வேண்டிய பிரேமதாசாவின் அரசோ, பிரதான எதிர்க் கட்சியான சுதந்திரக் கட்சியோ தமது முகத்திரை கிழிந்துவிடும் என்று இன்றுவரை தீர்வு எதையும் முன்வைக்காமல் மெதுவாகக் கழன்றுகொணட்டுதான்.

1991 நவம்பரில் தொடங்கி இற்றைவரை ஒன்றரை ஆண்டுகள் காலம் கடத்திய, 43 தடவை கூடிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முக்கிய முடிவு, ஏற்கனவே தற்காலிகமாகவேனும் இருந்த வடக்கு கிழக்கு இணைப்பைத் தேவையில்லை என்று முடிவு எடுத்ததுதான்.

இந்தக் குழுவில் ஐ.தே.க, ஸ்ரீலங்கா சு.க, முஸ்லிம் கொங்கிரஸ், கொம்யூனிஸ்ற் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யாழ் சுயேச்சை உறுப்பினர் ஸ்ரீநிவாசன், மட்டக்களப்பு உறுப்பினர் ஷேகு தாவுத் என்போர் இணக்கத்துக்கு வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இ.தொ.கா. ஏற்கனவே விலகிவிட்டது. முடிவுகள் வெளியானதுடன் சகல கொழும்புத் தமிழ்க் கட்சிகளும் முடிவுகளை நிராகரித்துள்ளன. தெரிவுக்குழுவுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதாகவும் முடிவு எடுத்துள்ளன. இது பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் பெரிய நெருக்கடியைத் தரக்கூடும். தமிழ்க் குழுக்கள் எவையும் ஏற்காத முடிவுகளை எப்படி நடைமுறைப் படுத்துவது என்பதும், கொழும்புத் தமிழ்க் குழுக்களாலேயே நிராகரிக்கப்பட்ட பிரேரணைகளை எப்படிப் புலிகள் ஏற்றுக் கொள்வது என்பதும் சிக்கல்கள்.

சுமுகமான அரசியல் தீர்வு என்று மேடைக்கு மேடை முழங்கிவரும் பிரேமதாசாவினது உள்நோக்கம் உண்மையில் அதுவல்ல என்பதைப் பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகள் காட்டியுள்ளன. அதேவேளை வடக்கில் மூன்று பெரிய ராணுவ நடவடிக்கைகளை இராணுவம் தொடங்கியுள்ளது. '∴புல் மூன்' (Full moon), 'செடவார', 'சுமண' என்று இந்த நடவடிக்கைகளுக்குப் பெயரிடப் பட்டுள்ளது. வவுனியா - மன்னார் பகுதியில் தொடங்கப்பட்ட நடவடிக்கைக்கு 'செடவார' என்றும், புல்மோட்டையில் தொடங்கப்பட்ட நடவடிக்கைக்கு '∴புல்மூண்' (பூரண சந்திரன்) என்றும் பெயரிடப் பட்டுள்ளது. 'சுமண' என்ற பெயரில் தொப்பிகல காட்டுப் பகுதியில் நடவடிக்கை தொடங்கியுள்ளது.


இந்த ராணுவ நடவடிக்கைகளுக்கு அண்மையில் ஆர்ஜென்டீனாவில் இருந்து வாங்கப்பட்ட, ∴போக்லாந்துப் போரில் பாவிக்கப்பட்ட சக்திவாய்ந்த மிகைஒலி (சுபர்சொனிக்) விமானங்கள் முதன்முதல் பாவிக்கப் பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில் வவுனியாவையொட்டி 250 சதுர கிலோ மீற்றர் பரப்பைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக ராணுவம் கூறியுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகளும், ராணுவ நடவடிக்கையும் புலிகளின் பலத்தைக் குறைப்பதனூடாகவே தமிழ் மக்களது உரிமைக் கோரிக்கையின் பலத்தைக் குறைக்க முடியும் என அரசு கருதுவது இவற்றிலிருந்து தெளிவாகிறது.

இந்த ராணுவ நடவடிக்கைகள் ஒருபுறம் நிகழ மறுபுறத்தில் வவுனியாவில் ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதியில் திடீர் திடீரென ஆட்கள் கடத்தப் படுவதாக அறியப் படுகிறது. வெள்ளைநிற வானில்வரும் கறுப்புப் பூனைகளின் நடவடிக்கையே இது என நம்பப்படுகிறது. இதுபற்றி அரச ஆதரவுத் தமிழ்க் குழுக்கள் பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியுள்ளன.

கிழக்கில் அறுவடை நேரத்தில் ராணுவத்தின் நடவடிக்கைகளுடன் ஒரு பகுதியாகப் பெருமளவு வயல்கள் தீக்கிரையாக்கப் பட்டுள்ளன.

<u>மாகாணசபை</u>

இரண்டாவது முக்கிய அரசியல்


"பயப்படாதீர்கள் யமமகாராஜா, அவர்கள் உயிரோடு வந்திருக்கும் ஈழத் தமிழர்கள். ஏஜென்சிக்காரன் கனடா கொண்டுபோறன் எண்டு ஏமாத்தி இங்க இறக்கிப்போட்டுப் போட்டான் யமகாதகன் போலிருக்கு"
யமலோகம்
CANADA
தம்பா..

www.tamilarangam.net

நிகழ்வாகக் கருதப்படக் கூடியது, மாகாணசபைக் கலைப்பு பற்றிய பிரேமதாசாவின் திடீர் அறிவிப்பாகும். இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணசபைகளே தற்போது கலைக்கப் பட்டவையாகும். வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபை, 1990இல் ஈபிஆர்எல்எஃப்பின் ஈழப் பிரகடனத்தை அடுத்துக் கலைக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

கிழக்கில் பொருளாதாரத்தை அழித் துவிடல்

வவுனியாவில் பூரண சநதிரன

கறுப்பு உடையில் பூனைகள்

வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு இப்போதைக்கு தேர்தல் நடக்கும் அறிகுறிகள் எதுவும் இல்லை. ஆயினும் ராணுவ அதிகாரிகள் சிலர், கிழக்கில் மேலும் சில பகுதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் (கிழக்கில்) தேர்தல் நடத்தலாம் எனக் கூறியது கவனத்திற்குரியது.

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் பிரேமதாசாவுக்கு முக்கியமாக உள்ளது. அவரது 4 வருடப் பதவிக்காலம் பற்றி மக்களின் 'அன்புக் கருத்து' எது என்பதை அறிய இது ஒரு வாய்ப்பாக அமையும். அடுத்த தேர்தலை நடத்த ஒரு கருத்துக் கணிப்பாகவும் இத் தேர்தல் பயன்படலாம். கிராமங்கள்தோறும் தனியார் புடைவை ஆலைகள் அமைத்து வருவதுடன் கிராமங்களை முன்னேற்றுவதாக அறிவித்த திட்டமும் பிரேமதாசாவின் தேர்தல் நோக்கிய கவர்ச்சிகளே.


முன்பு மாகாணசபைத் தேர்தலைத் தவிர்த்த சுதந்திரக் கட்சி, இம்முறை தனது பழைய தோழமைக் கட்சிகளான கொம்யூனிஸ்ற் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியவற்றுடன் களத்தில் குதிக்கிறது. ஐதேகவில் இருந்து பதவிப் போர் காரணமாக வெளியேறிய அத்துலத் முதலி, காமினி திஸநாயகா கோஷ்டிக்கும் இது பலப்பரீட்சைதான். அவ்வாறே தமிழரது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த நான்கு அம்சக் கோரிக்கையை ஏற்றுப் போட்டியிடும் நவசமசமாஜக் கட்சியும் அதனது தோழமை அமைப்புகளும் எவ்வளவு ஆதரவு பெறவுள்ளன என்பதும் இத்தேர்தலில் முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட வேண்டியது.

ஐதேகவை இத்தேர்தலில் 'காப்பாற்ற'க் கூடிய வாக்குகள் மலையகத் தமிழ் மக்களது வாக்குகள் என்பது ஒரு பெரிய உண்மையாகும். பல வருடங்களாக ஐதேகவுடன் இணைந்து ஆட்சியில் இதொகா பங்கெடுத்தும் மலையக மக்களது பிரச்சனைகள் முற்றாகத் தீர்க்கப் படாமை ஒரு பெரிய மனக்குறையாக இருப்பினும், இதுவரை ஒரு பலமான எதிரணி மலையகத்தில் தோன்றி வளரவில்லை என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது. மலையக மக்கள் முன்னணி பல இடங்களில் ஆதரவு பெற்ற அமைப்பாக இருப்பினும் அம்முன்னணியை ஒடுக்க, தொண்டா – பிரேமா கூட்டு தொடர்சதி செய்து வருவதும் கவனிக்கத் தக்கது.

ஏனைய கட்சிகள் இதுவரை எதிர்க்கட்சிகளின் பொது முன்னணி ஒன்றை ஏற்படுத்தத் தவறியமைக்குத் தண்டனையாக இந்தத் தேர்தல் முடிவுகள் அமையலாம்.●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அபிமன்யு

# அதிக செய்தியாளரைப் பலியெடுத்த ஆண்டு!

'ஃப்ரீடம் ஹவுஸ்' (Freedom House) என்ற அமைப்பின் அண்மைய அறிக்கை ஒன்றின்படி, மிக அதிக செய்தியாளரைப் (79பேர்) பலியெடுத்த ஆண்டு 1992தான். இந்த அமைப்பின் கணக்கெடுப்பு 1934 முதல் நிகழ்ந்து வருகிறது. இதற்குமுன் அதிக செய்தியாளர்களைப் பலியெடுத்த ஆண்டு 1989 (73பேர்).

இந்த அறிக்கையின்படி 53 செய்தியாளர்கள், அவர்களது பணிக்காகப் பழிவாங்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். 26பேர் 'யூகோஸ்லாவியா'வில் பணியில் உயிரிழந்தனர். துருக்கியில் 12பேர் கொல்லப் பட்டனர். பெரு கெரிலாக்களால் 10பேர் கொல்லப் பட்டனர். மனுவல் டி உனானுவே என்ற செய்தியாளர், லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள போதைவஸ்துக் கடத்தல்காரருக்கு வட அமெரிக்காவில் உள்ள தொடர்புகள் பற்றிய இரகசியங்களை வெளியிட்டமைக்காக, கொலைமிரட்டல்கள் பெற்றபின், அமெரிக்காவில் கொல்லப் பட்டார்.

67 நாடுகளில் (38%) சுதந்திரமான செய்தி வெளியீட்டு வசதிகள் உள்ளதாக இவ்வறிக்கை கூறுகிறது (1991இல் 39%). புதிதாக உருவான 20 நாடுகளில் ஓரளவு சுதந்திர செய்தி வெளியீடு உள்ளது. (ஓரளவு சுதந்திர செய்தி வெளியீடு உள்ள நாடுகள் 60, 34%, 1991இல் 31 நாடுகள், 21வீதம்). 50 நாடுகளில் சுதந்திர செய்தி வெளியீடே கிடையாது (28%, 1991இல் 65நாடுகள், 41%).

சர்வதேச செய்தியாளர் அமைப்பு (International Federation of Journalists) கடந்த வருடம், உலகில் யுத்தச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற 60 செய்தியாளர்கள் உயிரிழந்தனர் எனக் கூறுகிறது. 'யூகோஸ்லாவியா'வின் யுத்தத்திலேயே இவ்வாறு பலர் உயிரிழந்ததைக் குறிப்பிடும் அறிக்கை, சோமாலியாவில் பட்டினிச்சாவுகளைச் செய்தியாக்கிய பலர் மிரட்டப் பட்டதாயும் கூறுகிறது. துருக்கியில் குர்திஷ் பகுதியில் பல செய்தியாளர்கள் பாதிப்புக்கு உள்ளானதைக் கூறும் இவ்வமைப்பு, இவ்வருடம் இந்நிலைமைகள் பற்றி ஆராய ஒரு குழுவை அனுப்ப உள்ளது.

பணியில் இருந்தபோது 39 செய்தியாளர்கள் கொல்லப் பட்டதை இவ்வறிக்கை சுட்டுகிறது. மேலும் 23 பேரது மரணம் பற்றியும் விசாரணைகள் தொடர்கின்றன. செய்தித் தணிக்கையை அடிப்படை மனிதஉரிமை மீறலாகப் பிரகடனம் செய்யுமாறு அமைப்பு கோரியுள்ளது.

www.tamilarangam.net

'எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு' (Reporters Sans Frontiers) தெரிவிக்கும் தகவல்களின்படி, 20 நாடுகளில் செய்தியாளர்கள் தாங்கள் தெரிவித்த அபிப்பிராயங்களுக்காகப் பலியிடப் பட்டுள்ளனர். மேலும் 30 மரணங்கள் பற்றி அமைப்பு ஆராய்ந்து வருகிறது. 27 நாடுகளில் 120 செய்தியாளர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இந்த மரணங்களில் 25 ஐரோப்பாவில் நிகழ்ந்தன (துருக்கி 12, பொஸ்னியா ஹெர்ஸகோவினா 8, குறோவேஷியா 3 மற்றும் ஜோர்ஜியா, மோல்டோவாவில் தலா ஒன்று). கொலம்பியாவும் பெருவும் அடுத்த இடத்தைப் பெறுகின்றன (தலா ஐந்து). தஜ்கிஸ்தான் (3), சாட் (3), அங்கோலா (2), அமெரிக்கா (2), பிலிப்பைன்ஸ் (2), வெனிசுவேலா (2) என்பவற்றோடு அஸர்பைஜான், எகிப்து, ஹொங்கொங், லெபனான், பப்புவா நியூகினி, றுவாண்டா, சூடான் என்பனவும் பட்டியலில் இடம் பிடிக்கின்றன.

உண்மையைச் சொன்னால் பிடிக்காதவர்கள், இலங்கை இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் பல பாகங்களிலும் உள்ளனர் என்பதையே இந்த அறிக்கைகள் காட்டுகின்றன. உண்மையான, சுதந்திரமான செய்தி வெளியீட்டை நோக்கி உலகம் எப்போது நடைபோடப் போகிறது?

## சோலைக்கிளியின்
## வண்டு வணங்கிகள்

நான் கோயிலுக்குப் போகவேண்டும்
ஊத்தை வண்டை வணங்க.
என் தலை எழுத்து இது!
வெறும் கரித்துண்டால் எழுதப்பட்டு
அவமானப்படுத்தப்படுகிறது.

தவளையைத் தோளில் வைத்துக்கொண்டு திரியட்டாம்
இன்றையச் சமூக விதி
அப்படிச் சொல்கிறது.
எறும்பைக் கண்டால்
நான் எழுந்து நிற்கவேண்டும்.
அதைப் பகைத்துக் கொண்டால்,
எனது உணவு வாசல்கள் அடைக்கப்படும்.

ஊரில்
வெயில் இல்லாத
அற்பர்களின் கோடை இறைக்கிறது.
புழுத்தான் சொல்கிறது,
இரவையும் பகலையும்
நாங்களே நிர்ணயிக்கிறோம் என்று

இங்கு வணங்கஸ்தலங்களில் உள்ள தெய்வங்கள் எல்லாம்
சோறும் கஞ்சியும் வழங்கப்படாத
சிறையில் உள்ளன.
பல்லியும் பூச்சியும்
ஏன்; தெள்ளும் ஈரும்தான்
தமது சிலைகளைத் தாங்களே நட்டு
வணங்கச் சொல்கின்றன எம்மை.

என் பயிர் வாடுகிறது;
மழை வேண்டும்,
முதலையைப் பிரார்த்திக்கப் போகிறேன்; வழியில்
பூனை இல்லையே, நல்ல சகுனம்தான்!

06011992

www.tamilarangam.net




# விடைபெறும் நோர்வே வெளிநாட்டமைச்சர்

சுமார் ஒன்றரை லட்சம் மக்களை இதுவரை பலிகொண்டதாகக் கூறப்படும் 'யூகோஸ்லாவியா'வின் புதிய சமாதானத் தூதராக நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் தூர்வால்ட் ஸ்ரொல்தன்பெர்க் (Thorvald Stoltenberg) நியமிக்கப் பட்டுள்ளார்.

வரலாற்று ரீதியாக காலம் காலமாக யுத்தத்திற்குப் பேர்போன 'பல்கன்' நாடுகளில் தோன்றியுள்ள யுத்தம் ஐரோப்பிய நாடுகளில் குழப்பமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருகிறது. மிகுந்த பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் ஐரோப்பிய நாடுகள் இப்போரை உடன் முடிவுக்குக் கொண்டுவர விரும்புகின்றன.

யுத்தம் தொடரும் பட்சத்தில் அது ஐரோப்பிய நாடுகளின் அரசியற் போக்குகளைத் தலைகீழாக்கவிடும் எனப் பல ராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் 'பல்கன்' நாடுகளுக்கு நன்கு பரிச்சயமானவரும், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சேர்பியர்களாலும், பொஸ்ணியர்களாலும் மதிக்கப் படுபவருமான ஸ்ரொல்தன்பெர்க் புதிய சமாதானத் தூதராகப் பணியாற்ற வேண்டும் என்று ஐ.நா. அமைப்பின் பொதுச் செயலாளர் பூட்றஸ் காலி விடுத்த வேண்டுகோளை, ஸ்ரொல்தன்பெர்க் ஏற்றுள்ளார்.

தனது வெளிநாட்டமைச்சர் பதவியைத் துறந்து இந்தப் புதிய பணியை ஏற்க ஸ்ரொல்தன்பெர்க் பொஸ்ணியா பயணமாகியுள்ளார். திருமதி குறுாஹாலம் புறுண்ட்லாந்தின் ஆட்சியில் வெளிநாட்டமைச்சர் பதவி வகிப்பதற்காக, அகதிகளுக்கான ஐ.நா. தூதராலயத்தின் செயலாளர் நாயகம் பதவியைத் துறந்து நோர்வே வந்த இவர், மீண்டும் சர்வதேச அரங்கில் முக்கிய பணி ஒன்றுக்காகச் செல்கிறார். இவரது முயற்சி வெற்றியளிக்குமா என்பதைக் காலம்தான் சொல்லும்.

ஸ்ரொல்தன்பெர்க் புதிய சமாதானத் தூதராக நியமனம் பெற்றதை பல்கன் நாடுகள் வரவேற்றுள்ளன. இவரது நியமனத்தை வரவேற்றுள்ள சேர்பிய உதவி வெளிநாட்டமைச்சர் நிகோ சிசனோவிச். புதிய முயற்சிகள் பற்றி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். நோர்வே – யூகோஸ்லாவிய நல்லுறவுக்காக முக்கிய பங்காற்றிய ஸ்ரொல்தன்பெர்க், சேர்பியர்கள் – குறொவேசியர்கள் – பொஸ்னியர்களை உள்ளடக்கிய ஒன்றுபட்ட யூகோஸ்லாவியாவுக்காக 1961இல் முக்கிய பங்காற்றியவர் என்பதையும் சிசனோவிச் நினைவுகூர்ந்தார். குறோவேசிய வெளிவிவகார அமைச்சர் இவாணா மொறிச், இந்நியமனம் பற்றி மகிழ்ச்சி

www.tamilarangam.net

தெரிவித்ததுடன், ஸ்றொல்தன்பெர்கின் கடந்தகால வெளிவிவகார அனுபவங்களும், பாதுகாப்புத் துறை அனுபவங்களும், ஐ.நா அமைப்பில் அவராற்றிய சேவைகளும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

சேர்பிய, குறொவேஷிய மொழிகளை நன்கு பேசக்கூடியவராக ஸ்றொல்தன்பெர்க் இருப்பதால், அவர்மீது சகல தரப்பினரும் இலகுவில் நெருக்கமும் நம்பிக்கையும் கொள்ளல் சாத்தியம். இது அவரது பணிகளை இலகுவாக்கலாம்.

**மாதவன்**

# அமைதியிழந்து தற்கொலை செய்துகொள்ளும் ஐ.நா. அமைதிப் படையினர்

**ஏகாந்தன்**

உலகின் பல பாகங்களிலும் யுத்தங்கள் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றிலும் யுத்தம் அன்றாட வாழ்வின் ஓரம்சமாக கலந்துவிட்டது. இந்நாடுகளே விரும்பினாலும் யுத்தத்தைக் கைவிட முடியாத சிக்கலான நிலைமைகள் சில இடங்களில் தோன்றியுள்ளன.

யுத்தம் எத்தனை துாரம் கொடுமையானது; அது எத்தனை சேதங்களை விளைவிக்கும் என்பன பற்றி எம்மிற் பலர் விளங்கிக் கொள்ளவில்லை, அல்லது அறிய விரும்பவில்லை. யுத்தத்தின் கொடூர விளைவுகளுக்கு ஒரு சிறு உதாரணமாக, அண்மையில் நோர்வேயிலிருந்து சென்று ஐ.நா. அமைதிப்படையில் பணிபுரிந்த சிப்பாய்கள் பற்றி வெளிவந்த அறிக்கை உள்ளது.

ஐ.நா. அமைதிப்படையில் லெபனானில பணிபுரிந்த நோர்வேஜியர்கள் 16,000 பேரிடம் கேள்விக் கொத்து ஒன்று வழங்கப்பட்டு, அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விவரங்கள் திரட்டப் பட்டுள்ளன. கடந்த வருடங்களில் 46 பேர் அமைதிப் படைக்காகப் பணியாற்றிய காலத்தில் தற்கொலை செய்திருக்கின்றனர். இவர்களது தற்கொலை வீதம், சாதாரணமாக நோர்வேயில் நிலவும் தற்கொலை வீதத்தைவிட மிக அதிகமாகும். ஒழுங்கு மற்றும் மருத்துவக் காரணங்களுக்காக 316 படையினர் பதவிக்காலத்தில் தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர். சுமார் 700 படையினர் வேறு காரணங்களுக்காக சேவையில் இருந்து இடையில் நிறுத்தப் பட்டனர். இந்தச் சிப்பாய்களிடையே மதுபாவனை மிக அதிகமாகவும் இருந்தது அவதானிக்கப் பட்டுள்ளது. சில சமயங்களில் இவர்கள் போதை வஸ்துக்களையும் பாவிக்கின்றனர் என அந்த அறிக்கை கூறுகிறது.

யுத்தகாலப் பயமும் விரக்தி மனப்பான்மையும் தனிமையுமே இந்நிலைமைகள் ஏற்படக் காரணம் எனக் கூறப்படுகிறது. யுத்தம் கொடுமையானது, யுத்தத்தை நிறுத்தி அமைதி ஏற்படுத்தச் சென்றிருக்கிறோம் என்ற நம்பிக்கையில், பல சிப்பாய்கள் தங்கள் அமைதியை இழக்கிறார்கள், சிலவேளை உயிரையும்கூட.

www.tamilarangam.net

# தேசம் எரிகின்ற கனவு

எனது தேசம் எரிகின்ற கனவு
இன்னும் கலையவில்லை!
கண்களைக் கசக்கினேன்.
தண்ணீர் கொண்டு கழுகினேன்.
மெல்லிய சீலையால் துடைத்தேன்.
இன்னும் கலையவில்லை;
படம்
ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.

கனவு கலையாத என் கண்களை
நான் என்ன செய்ய?
சூரியனைப் பார்க்கிறேன்.
பகல் வேளையாய் இருந்த பொழுதும்
மங்கிய வெள்ளிகளை எண்ணி
கண்ணின் கூர்மையை அதிகப்படுத்துகிறேன்.
கலையவில்லை கனவு;
இன்னும் என்தேசம் எரிந்துகொண்டுதான் இருக்கிறது!

நான் இன்னும்
தெருவில் உதிர்ந்து காலுக்குள் நசிபடும்
பெண்ணின் முலைகளைப் பொறுக்குகிறேன்.
எறும்பின் இரைப்பைக்குள்
சிறைவைத்துத் தடுத்திருக்கும்
மனிதர்களைப் பார்த்து அழுகிறேன்.
றப்பர் மரங்களை நிமிர்த்துகிறேன்.
எரிந்த தேயிலையின்
கொழுந்தை முக்கில் பிடித்தும் அழுகிறேன்.
இன்னும் கனவு நீண்டுதான் போகிறது;
கலையவில்லை.


என் தேசமே!
நீ எரியும் கனவுக்கு இவ்வளவு சக்தியா!
விடிய விடியக் கண்டும்
விடிந்தும் ஓடுகிறதே, திரை
என் கண்களாகி;
உன் தோஷம்.



17.02.92

சோலைக்கிளி

www.tamilarangam.net




# இரண்டு கலாசாரங்கள்; ஓர் ஓவியர்

## அகதியாய் வந்த கலைஞர்

ஜேர்மனியில் பிறந்து, நோர்வேயில் தனது பிற்காலத்தைக் கழித்த ஒரு புகழ்பெற்ற ஓவியர் றொல்ஃப் நெஸ்ஷ (Rolf Nesch). இவ்வருடம் அவர் பிறந்து நூறு வருடங்கள் நிறைகின்றன. அவரது நூற்றாண்டு நிறைவு, நோர்வேயிலும் ஜேர்மனியிலும் ஒரே வேளையில் கொண்டாடப் படுகின்றது.

எஸ்லிங்ஙன் என்ற ஜேர்மன் நகரில் 1893 ஜனவரி ஏழாம் திகதி பிறந்த நெஸ்ஷ, தனது கல்வியை முடித்தபின் முதலாம் உலக யுத்தத்தில் ஜேர்மனியப் போர்வீரராகப் போர்முனைக்குச் சென்றபோது, பிரிட்டிஷ் சிப்பாய்களால் சிறைப்பிடிக்கப் பட்டார். பின்பு சில வருடங்கள் ஜேர்மனியில் வாழ்ந்த அவர், தனது எஞ்சிய வாழ்க்கைக் காலத்தை நோர்வேயில் கழித்தார். 1933இல் அகதியாக நோர்வே வந்த நெஸ்ஷ, 1946இல் நோர்வேஜியப் பிரஜையாகி, ஒஸ்லோவில் 1975இல் மரணமடையும்வரை, நோர்வேயிலேயே வாழ்ந்தார். ஓவியம் சார்ந்த பல துறைகளிலும் நெஸ்ஷ சிறப்பாக விளங்கினார். வண்ண ஓவியங்கள், கோட்டு ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள் எனப் பல துறைகளிலும் அவரது திறமை பளிச்சிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நோர்வேயை ஆக்கிரமித்த ஜேர்மனியப் படையினரின் கட்டாய ராணுவ சேவையைத் தவிர்ப்பதற்காக, 1943இல் 'ட்றாம்' (த்றிக்) வண்டியின்முன் பாய்ந்தவர் நெஸ்ஷ். 1950இல் நியூயோர்க்கில் நிகழ்ந்த இவரது படைப்புகளின் கண்காட்சி இவரது சர்வதேசப் புகழுக்குக் காரணமானது. இவரது பெரும்பாலான படைப்புகள் நோர்வேயின் தேசிய காட்சியகத்தில் உள்ளன. இவரது படைப்புகளில் சிலவற்றின் அமைப்பு, இலங்கை ஓவியக் கலைஞர் மாற்குவின் படைப்புகளை நினைவுபடுத்துகிறது.

● அபிமன்யு

# குலவிளக்கா? குத்துவிளக்கா?

**சேகரன்**



அவர் நோர்வேக்குக் குடிபெயர்ந்து பல வருடங்கள் ஓடிவிட்டன. உழை உழை என்று உழைத்து சகோதர சகோதரிகளுக்கு வாழக்கையில் உயர உதவினார், பிறகு கார், வீடு என்று வாங்கியாயிற்று. அவருக்கோ கல்யாணப் பருவம் கடந்து சில வருடங்கள் ஓடிவிட்டது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். வீட்டுக்காரரோ கல்யாணப் பேச்சை எடுப்பதற்கான எந்த அறிகுறியையும் காணவில்லை. பொறுமையிழந்த அவர் தாய்க்குச் சிலேடையாகக் கடிதம் எழுதினார்.

'அம்மா, நான் ஒரு புதுவீடு வாங்கிப் பல நாட்கள் ஆகிவிட்டது. வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க ஒரு நல்ல குலவிளக்கு வேண்டும். அதுதான் இப்ப பிரச்சனை...' என்றிருந்தது கடிதத்தில்.

'மகனே கவலைப்படாதே, வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க இங்கு பல இடங்களில் தேடி, நல்ல விலைகூடின குத்துவிளக்கு வேண்டி வைத்துள்ளேன். யாரும் வரும்போது கொடுத்துவிடுகிறேன். நல்ல நாளாப் பார்த்துப் புதுவீட்டுக்கு விளக்கேற்றிவை.'

www.tamilarangam.net

# சயனைட்டு மரணங்கள்

ஆசிரியர்,
சுவடுகள்.

I

அண்மைக் காலங்களாக சுவடுகளில் வந்துகொண்டிருக்கும் சயனைட் தற்கொலைகள் பற்றிய கருத்துப் பரிமாற்றம் வரவேற்கப்பட வேண்டிய அம்சம். இலங்கையில் சயனைட் மரணங்கள் பற்றி யாரும் (வேறு) கருத்துக் கூறுவதில்லை (முடியாது). எல்லாமே வீரச்சாவுகள் (என்ற கணக்குத்) தான். ஆனால் இந்த மரணங்கள் தவிர்க்கப்படக் கூடியவை என்றும், இது மாற்றப்பட வேண்டும் என்றும் சிலராவது வெளிநாடுகளில் இருந்தாகிலும் சிந்திப்பது நல்ல விடயம்.

ஆனால் இந்த விவாதம் பலன் தரவேண்டும் என்றால், அதாவது சயனைட் மரணங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்றால், புலிகள் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்திற்கு வரவேண்டும். இன்றுவரை அதற்கான அடையாளச் சமிக்ஞைகளைக் காண முடியவில்லை.

II

சிவசேகரம் கூறியதுபோல் தற்கொலை, வெறுமனே கோழைத்தனத்தின் அடையாளம் மாத்திரமல்ல. திலீபனின் தியாக மரணத்தை (அதுவும் ஒருவகைத் தற்கொலைதானே!) யாராவது விசாரணைக்கு உட்படுத்த முடியுமா? தனது வயோதிபத்திலும் நாட்டுக்காக உண்ணாவிரதம் இருந்து மரணம் எய்திய பூபதியின் மரணம் எந்தக் கணக்கில் சேர்த்துக் கொள்வது? இவைகள் தற்கொலைகள்தான். கோழைத்தனத்தின் அடையாளங்கள் அல்ல, பதிலாக இவற்றை வீரச்சாவு என்றே கொள்ளல் வேண்டும்.

# நாற்சந்தி

அன்புள்ள சுவடுகள் ஆசிரியருக்கு,

அந்தனி ஜீவாவின் கடிதம் நியாயமானது. சித்திரலேகா அவ்வாறு செய்திருக்கக்கூடாது. இந்த விடயம் பற்றி அந்தனிஜீவா அவர்கள் தினகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

‘அறுசுவை’யிலும் குறிப்பிட்டிருந்தார்.

‘சாளி சப்ளின்’ பற்றியும் அவரது திறமை பற்றியும் புதிய நோக்கில் எழுதப் பட்டிருந்தது. இதுவரை அவரைப் பற்றிய நகைச்சுவைத் திறமைகளை மாத்திரமே அறிந்த எனக்கு, சுரண்டலுக்கு எதிராகவும் அவரது சிந்தனை செயற்பட்டதை அறிந்தது புதிதாய் இருந்தது.

யோ.யோசேப் அவர்களின் கடிதம் பச்சைப் பொய். நாட்டின் மீட்புக்காகவும், எதிர்காலச் சந்ததியினருக்காகவும் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் விடுதலைப் புலிகள் என்று கூறியுள்ளார். புலிகளிடம் இந்த இரண்டும் அறவே இல்லை. வெறும் வேசம்தான். புலிகளைப் பற்றி இன்று உலகுக்குத் தெரிந்த விடயம், அதிகப்படியான மனிதக் கொலைகளைச் செய்பவர்கள் என்றும், மிக மோசமான மனிதஉரிமைக் கும்பல் என்றுமே.

யோசேப் கூறுவதுபோல், போராட்டம் பற்றிய யதார்த்தமான சிந்தனைகள் துளியும் புலிகளிடம் இல்லை. அவர்களிடம் இன்று இருப்பதெல்லாம் மனித வெறியாட்டமே. தொடர்ந்து சந்திக்கின்ற தோல்விகளால், மானுடத்தின் இரத்தம் பருகுவதிலேயே சுகம் காணுகிறார்கள். விமர்சனத்த அங்கீகரிக்கிற பக்குவ மனோநிலை இல்லாததினால், சொந்த

## III

யோசேப் எழுதியதுபோல தமிழர்களை அழிப்பதுதான் பிரேமதாசாவின் நோக்கம். சயனைட் சாவுகள்கூட இந்த நோக்கத்தின் ஒரு பகுதியை நிறைவு செய்கின்றன. புலிகளின் கணக்குச் சரியாக இருந்தால் இதுவரை பல ஆயிரம் பேரை சயனைட் விழுங்கிவிட்டது.

சிவா.கணேசமூர்த்தி கேட்டதுபோல பிரபாகரன் பிடிபட்டால் சயனைட் அடிப்பாரா என்ற கேள்வி அர்த்தமற்றது. இந்தியாவில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட போது, அவர் சயனைட் அருந்தவில்லை. கிட்டுவும் இந்தியாவில் கைது செய்யப்பட்ட போது சயனைட் அருந்தவில்லை. புலேந்திரன், குமரப்பா போன்றோரும் கைது செய்யப்பட்ட உடன் சயனைட் அருந்தவில்லை. ஒரு காலத்தில் புலிகளின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவராயிருந்த அருணா கைதானபோது சயனைட் அருந்தவில்லை. (அவர் இறக்கவில்லை என்பது புலிகளுக்கே நீண்ட நாட்களுக்குப் பின்பே தெரியும்) இலங்கை அரசுடன் கைதிப் பரிமாற்றத்தில் இவர் வெளியே வந்தது அனேகம் பேருக்குத் தெரிந்த விடயம். இவர் சயனைட் அருந்தியிருப்பின் புலிகளாலோ கடவுளாலோ இவரை மீட்டிருக்க முடியாது. (இவர் மரணம் அடைந்ததாக நினைத்து நடந்த ‘மரணஊர்வல’த்தில் பிரச்சனை நிகழ்ந்ததும் மறக்க முடியாதது) எனவே சயனைட் அருந்தக்கூடாது என்று ஒரு (உயர்)மட்டத்தில் நடைமுறை இருப்பதாகத் தோன்றுகிறது.

இத்தனை உதாரணங்கள் இருக்கும்போது நித்தியானந்தன் பற்றிய உதாரணம் பலமற்றது. நித்தியானந்தன் (பிற்காலத்தில்) முழுநேர உறுப்பினராக இருந்திருப்பினும் அவர் ஆயுதப் போராளியாக இருக்கவில்லை. அவர் கைதானபோது வெறும் (தீவிர) ஆதரவாளராக மாத்திரமே இருந்தார் என்பது அனேகம் பேருக்குத் தெரிந்த விடயம்.

## IV

எல்லாவற்றுக்கும் மேலாக சயனைட் அருந்துவது எதற்காக என்பது பற்றி யாராவது விளக்கம் சொன்னால் நல்லது.

பத்து வருடங்கள் முன்பு சயனைட் அருந்துவதற்குக் கூறப்பட்ட காரணம், ஆமியிடம் பிடிபட்டால் இயக்க ரகசியத்தை வெளியிடாமல் இருப்பதற்கே சயனைட் அருந்துவது

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது. கிட்டடியில் பி.பி.ஸி நிகழ்ச்சி ஒன்றில் பிரபாகரன் கூறியது வேறுவிதமாக இருந்தது. அவரது கருத்துப்படி, முதலில் தான் எதிரியிடம் கைதாவது தனக்குக் கௌரவம் இல்லை என நினைத்ததாகவும், அதனால் தான் சயனைட் குப்பியைக் கழுத்தில் மாட்டியதாகவும், அதன்பிறகு தனக்குப் பின்னால் வந்தவர்கள் தொடர்ந்து அதையே நடைமுறையில் கொண்டிருப்பதாகவும் கூறினார். அவரது கருத்துப்படி சயனைட்டை புலிகள் விரும்பி அணிகிறார்கள், அதாவது சயனைட் அணியவேண்டும் என்பது கட்டளையில்லை. ஆனால் அதே நிகழ்ச்சியில் பயிற்சி முடித்ததும் வீராங்கனைகளுக்கு சயனைட் (கட்டாயமாக) வழங்கப் படுவதையும் பார்க்க முடிகிறது. உண்மையில் புலிகளைப் பொறுத்தவரை சயனைட் ஒரு must. சயனைட் இல்லாத புலிகளை சகபுலிகளே ஏற்பார்களோ என்பது ஐமிச்சம்.

V

தமிழர்களில் ஒருவராவது அநியாயமாகச் சாகக்கூடாது. ஆமியிடம் பிடிபடுவது கௌரவக் குறைச்சல் அல்ல. பிடிபடுவதற்கான சந்தர்ப்பங்கள் எல்லாப் போராளிக்கும் உண்டு. எனவே கைதைத் தவிர்க்க சயனைட் அருந்துவது நல்லதல்ல என்பதைப் புலிகளின் தலைமை உணரவேண்டும். தலைவரின் கழுத்திலிருந்து சயனைட் இறங்கும்வரை புலிகள் யாரும் சயனைட்டைக் கைவிடப் போவதில்லை. எனவே இந்த விடயத்தில் பிரபாகரன் முன்மாதிரியாக நடந்துகொள்வது அவசியம்.

சயனைட் அருந்தி உயிர்துறப்பது வீரமா கோழைத்தனமா என்பதல்ல பிரச்சனை, அது (சயனைட் அருந்தல்) அநியாய இழப்பு என்பதுதான் பிரச்சனை. எதுவாயினும் அவர்களது மரணம் தியாகம் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சயனைட் அருந்தி இறந்த போராளிகள் அனைவரது மரணத்தையும் சுவடுகளில் நடக்கும் விவாதங்கள் கொச்சைப்படுத்தக் கூடாது.

சி.மகாதேவன்
இலங்கை

மக்களின் சுட்டுக் குவிக்கிறார்கள். சகோதர இயக்கங்களைத் தடம் தெரியாது அழிக்க முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

புலிகள் விடுதலைப் போராட்டமே நடத்தவில்லை என்பதற்கு பிரபாகரனின் – வடகிழக்கில் ஒரு முஸ்லிம்தானும் மிஞ்சாது அனைவரையும் கொலை செய்தாக வேண்டும் என்ற ஆணையும்; சிந்தனையாளர்களையும், ஏன் எதற்கு என்று கேட்கின்ற நியாயவாதிகளை சித்திரவதை முகாம்களில் அடைத்து சாகடிப்பதும் நல்ல சான்றாகும்.

ஆசிரியர் அவர்களே, தங்களது செயற்பாடுகள் எல்லாம் தமிழ் மக்களின் வாழ்வை நிருணயித்துக் கொடுப்பதாகவும், அவர்களது நியாயமான போராட்டத்திற்குத் துணைபோவதாகவுமே அமையவேண்டும். மனிதர்களைக் குதறி எறிகின்ற துவேசப் போக்காளர்களையும், அவர்களது அனைத்துச் செயற்பாடுகளையும் நொறுக்கி, மனித சுதந்திரத்தை நிலைநிறுத்துகின்ற இயங்குதலுக்கு 'சுவடுகள்' யுத்தக் குரல் தரவேண்டும். அந்த நியாயத்தையும், நேர்மையையும் 'சுவடுகள்' செய்யும் என எதிர்பார்க்கிறேன்.

எம்எஸ்எம்.அன்ஸார்,
இலங்கை.
02.03.93

www.tamilarangam.net

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர்,

இறந்த தன் குழந்தையை உயிர்ப்பிக்குமாறு வேண்டி ஒரு பெண் கௌதமரை அணுகினாள். அவர் அப்பெண்ணிடம் சா நிகழாத வீட்டிலிருந்து ஒரு பிடி எள் கொண்டுவருமாறு கேட்டாராம். அப்பெண் அவ்வாறு செய்ய முயன்று முடிவிலே கௌதமர் சொல்ல முனைந்த உண்மையை உணர்ந்து மனம் ஆறினாள் என்று ஒரு கதை பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

பாரிஸ் நகரில் நடந்த இலக்கியச் சந்திப்புக்குப் போனேன். அதுபற்றி ஓசையிலும் பாரிஸிலிருந்து வரும் ஒரு செம்மஞ்சள் பத்திரிகையிலும் வந்த விமர்சனங்களைப் பார்த்தேன். இப்போது ஸ்ரீமான் சமர் எழுதிய கடிதத்தைச் சுவடுகளிற் கண்டேன்.

அந்தப் பெண் அவரை நாடியிருந்தால் கௌதமர் இன்றைக்கு உயிருடன் இருந்து, மயிர் இல்லாத முட்டையைக் கொண்டு வருமாறு சொல்லியிருப்பார்.

ஸ்ரீமான் சமருடைய உலகில் வெள்ளையில்லாத யாவும் கறுப்பாகவே இருக்க முடியும். அவரது பார்வை நிறக்குருடானது மட்டுமல்ல வெள்ளைக்கும கறுப்புக்கும் இடையே வேறுபட்ட சாம்பல் நிறங்களைக்கூடக் காண வலிமையற்றது. பாரிஸிலிருந்து ஈழத்துப் பிரச்சனைக்கு முகங்கொடுத்து எதிர்நீச்சலடிப்பது ஒரு மகத்தான சாதனைதான். இவரது கடிதத்தில் தற்கொலை மிரட்டலாகவோ, ஆட்சேபனையாகவோ அமையும் சூழ்நிலைகள் பற்றிய உதாரணங்களைக் கேட்டது மட்டுமே ஒரு உருப்படியான கேள்வி.

ஙோ டின் டியெம், தென் வியற்னாமிய எடுபிடி அரசின் தலைவராக இருந்தபோது அந்த ஆட்சியின் கொடுங்கோன்மைக்கு எதிராக புத்தபிக்கு ஒருவர் தீக்குளித்தார். தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உத்தியோகத் துறைகளில் இட ஒதுக்கீடு செய்வதற்கு எதிராக உயர்சாதியினர் சிலர் தீக்குளித்தனர். சீதனக் கொடுமைக்கு எதிராகப் பெண்கள் தற்கொலை செய்த செய்திகள் இரண்டு ஆண்டுகள் முன்பு இந்திய ஏடுகளில் வந்தன. இவை எல்லாம் வெறும் கோழைத்தனத்தின் வெளிப்பாடுகளல்ல. கயானாவில் பல வருடங்களுக்கு முன்பு ஒரு தீவிர கிறிஸ்தவ மதப்பிரிவினர் கூட்டமாகத் தற்கொலை செய்தனர். தற்கொலையின் சரிபிழைகளும் அங்கீகாரமும் மறுப்பும் வாழ்க்கை பற்றி ஒவ்வொருவரது கணிப்பீடு சார்ந்தவை. எடுத்த எடுப்பில் அது கோழைத்தனம் என்று சொல்வது ஒற்றைப் பரிமாணப் பார்வையிலும் குறைபாடுடையது.

புலிகளின் சயனைட் கொள்கை பற்றி முன் சொன்னதைவிட அதிகம் சொல்ல அவசியமில்லை. அதை விளங்கிக்கொள்ள விரும்பாத ஒருவர் மேலதிகமாக எழுதும் எதையுமே விளங்கிக்கொள்ள முடியாது.

நித்தியானந்தன் பொலிஸாரால் பிடிக்கப்பட்ட காலம் 1982 பிற்பகுதி அல்லது 1983இன் முற்பகுதி என நினைவு. அப்போது சயனைட் கலாச்சாரம் இருந்ததாக நினைவில்லை. இருந்திருப்பினும் அதை அவர் கடைப்பிடிப்பதும் கைவிடுவதும் அவரது தனிப்பட்ட முடிவு. அது தொடர்பாக அவர்மீது தீர்ப்பு வழங்கும் ஸ்தானத்தில் நான் என்னை அமர்த்த முயலவும் இல்லை. வேதாளம் விக்கிரமாதித்தனிடம் புதிர் போட்ட மாதிரி ஸ்ரீமான் சமர் என்னிடம் அசட்டுக் கேள்வி கேட்டால் நான் என்ன சொல்வது? "பழையபடி முருக்கமரத்திலேயே போய் அமர்ந்துகொள்ளும் வேதாளரே" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

அன்புடன்,
சிவசேகரம்
30.03.93

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சேகரன்

# படம் சொல்லும் கதைகள்

படம் சொல்லும் கதைகள்



பதினேழு வருடங்கள் முன்னதாக வியட்னாம் யுத்தம், அமெரிக்காவின் வரலாறுகாணாத தோல்வியுடன் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது. ஆனால் அமெரிக்காவின் ஆதரவுடன் யுத்தம் புரிந்த இந்த கெரில்லாக்களுக்கு யுத்தம் முற்றாக முடிந்ததென்னவோ கடந்த வருடம்தான். வியட்னாமின் எல்லையிலிருந்து 30கி.மீ, தொலைவில் தங்களது முகாமை அமைத்து அங்கேயே விவசாயம் செய்து, மீன்பிடித்து, பண்ணைகள் வைத்திருந்து போர் நடத்திய இந்தக் கெரில்லாக்கள் (400பேர்) ஃபுல்ரோ (FULRO) என்ற கெரில்லா அணியைச் சேர்ந்தவர்கள். கடந்த வருட இறுதியில் தங்களது கொடியை கம்போடியாவில் உள்ள ஐ.நா. அமைப்பில் கையளித்து, 'யுத்தம்' முடிவுக்குக் கொண்டுவரப் பட்டதாக அறிவித்தனர் இவர்கள். எவ்வாறாயினும் அதற்கு முந்திய இரு வருடங்களும் இவர்கள் சண்டை எதிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

www.tamilarangam.net

www.tamilarangam.net

ஓடமும் ஒருநாள் வண்டியிலேறும், வண்டியும் ஒருநாள் ஓடத்திலேறும்' என்ற தமிழ்ப் பழமொழி பலருக்கு நினைவிருக்கலாம். இங்கு (குதிரை) வண்டியில் ஏறியிருப்பது பழைய அம்பாஸிடர் கார். இப்படி வண்டியில் ஏற்றிச் செல்லும் நிலை எல்லாக் கார்களுக்கும் ஏற்படாமல் விட்டாலும், இந்தியாவில் புதிய கார்களின் வருகை உள்ளூர்க் காரான அம்பாஸிடருக்கு பலர் 'வணக்கம்' சொல்லக் காரணம் ஆகிவிடுகிறது. இந்தியாவில் கார்ப் போக்குவரத்து மிக விரைவாகப் பெருகிவருகிறது.




இந்தப் படத்தைப் பார்த்து, பஸ்ஸினுள் எடுக்கப்பட்ட படம் என நினைத்தீர்கள் என்றால், நீங்கள் அவ்வளவு புத்திசாலி என்று அர்த்தமில்லை. உலகில் மலிவான விமானக் கட்டணங்களுக்குப் பேர்போன 'சோவியத்' விமான நிறுவனமான ஏரோபிளட்டின் விமானம் ஒன்றில் எடுக்கப்பட்ட படம் இது. சோவியத் மாற்றங்களுடன் வந்த மாற்றங்களில் இதுவும் ஒன்று. பயணிகளின் பாதுகாப்பைவிடப் பணம்தான் முக்கியம் என்று சொல்லாமல் சொல்கிறது ஏரோபிளட். இது அடிக்கடி காணும் ஒரு காட்சியல்ல என்றாலும் இந்தப் போக்கு நல்லதுக்கல்ல என்று மட்டும் சொல்லலாம். சாதாரண விமானங்களில் காணக் கிடையாத இந்தக் காட்சி, ஜோர்ஜியாவின் தலைநகர் த்பிலீசியில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்றினுள் எடுக்கப் பட்டது.



www.tamilarangam.net

# வெவ்வேறு பத்திரிகைகளில் இருந்து —



Above: From L'Hebdo, Geneva.
By CHAPPATTE




Above right: From Times Colonist, Victoria, Canada.
By RAESIDE



Above: From Le Monde, France.
By PLANTU




Left: From La Nacion, Costa Rica.
By ARCADIO


CARTOONISTS & WRITERS' SYNDICATE

www.tamilarangam.net

# கண்டு ரசித்த கேலிச் சித்திரங்கள்

*Courtesy Riddell of The Independent, London*



*"The New Zealanders have exploded a harmless nuclear device in Normandy!"*

www.tamilarangam.net

**ஸெவ்டே குத்ரத் 1907-ல் இஸ்தான்புல்லில் பிறந்தார். முதல் உலகப்போரில் தந்தையை இழந்தார்.. தாய் மேற்கொண்ட கடினஉழைப்பில், படித்து முன்னேறினார். இலக்கிய ஆசிரியராகத் திகழ்ந்ததுடன், வக்கீலாகவும் பணியாற்றினார். கவிதை, நாடகம் தவிர கதைகளும் எழுதினார். இரு நாவல்கள் எழுதி முடித்துள்ள இவர், மூன்றாவது நாவல் எழுத முனைந்துள்ளார்.**

"தர்ஷன் ஆகா செத்துப் போயிட்டாரு!" என்று ஓடிவந்தான் அந்தச் சிறுவன்.

எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

"டேய்! என்னடா உளர்றே?" என்று யாரோ சத்தம் போட்டார்கள்.

ஆனால் தெரியவந்த விஷயம் என்னவோ உண்மைதான். குன்றின் அடிவாரத்தில் இருந்த நீர்ச்சுனையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து விற்பவன் தர்ஷன்ஆகா. ஐம்பது வயது இருக்கும் அவனுக்கு; திடகாத்திரமான உடம்பு; மனைவியையும், இரு சிறிய பையன்களையும் வைத்துக்காப்பாற்ற, தண்ணீர் எடுத்து வந்து கொடுத்து ஜனங்களிடமிருந்து கூலி பெற்றுக்கொண்டிருந்தான். யார் நினைத்தார்கள் ஆகா இந்தமாதிரி செத்துப் போவான் என்று?

"தண்ணீர் வேணுமா தண்ணீர்?" என்று அவன் எழுப்பும் குரல் தெரு முனை வரைக்கும் கேட்கும்.

"ஆகா! எனக்கு ஒரு குடம்!" என்று சிலர், "இரண்டு", "மூன்று" என்று அவரவர் தேவைக்கேற்ப அவனிடம் சொல்வார்கள். கழுத்தில் ஒருபெரிய இரும்புத்தடியை இறுக்கி, இருமுனைகளிலும் இரு குடங்களைக் கட்டி நீர் எடுத்துவந்து கொடுத்துவிட்டு, பணம் வாங்கிக் கொள்வான். அவன் குடும்பத்தில் உள்ள நான்கு வயிற்றுக்கும் இந்தக் கூலி போதாதுதான். ஆனால் என்ன செய்ய? அவ்வப்போது அவன் மனைவி யார் வீட்டிலாவது வேலை இருந்தால், போய் செய்துவிட்டுக் கிடைப்பதை வாங்கி வருவாள். ஏதோ ஒருமாதிரி தடுமாறிக் கொண்டு குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது.

இப்போது திடீரென்று இம்மாதிரி முடிவு ஏற்பட்டுவிட்டது. சுனைக்குத் தண்ணீர் எடுக்கச் சென்றவன், இருகுடங்களையும் நிரப்பித் தோள் மீது ஏற்றிக்கொண்டு திரும்பி இருந்திருக்கிறான். திடீரென்று கால் வழுக்கிவிட, சுமையுடன் கீழே விழுந்தவனின் தலை அங்கிருந்த கல் குழாய் மீது மோத, தலையில் பலத்த காயம். கீழே விழுந்தவுடன் அப்புறம் உயிரோடு எழுந்திருக்கவில்லை. என்ன அநியாயமான சாவு! ஆள் பார்க்க அத்தனை திடசாலியாயிருந்தாலும், சாகவேண்டிய தருணம் வந்து விட்டால் தப்பிக்க முடியாது தான்.

ஆகாவின் முடிவைக் கேட்டதும்

துரு...

ஸெவ்டே...

தமிழில்: ஸிந்துஜா.

குல்நாஸ் -- அவன் மனைவி -- உறைந்தே போனாள். எப்படி இதைத் தாங்குவது? ஆகா விட்டுச்சென்ற சொத்துக்கள் அந்த இரு குடங்களும், இரும்புக்கழியும்தான். 'கடவுளே! இரு குழந்தைகளையும் வைத்துக்கொண்டு எப்படி வாழப் போகிறேன்!' பெரியவனுக்கு ஒன்பது வயதாகிறது. சிறியவனுக்கு ஆறு, நாலில், இரண்டில் யார் வீட்டிலாவது வேலைசெய்து வயிற்றைக் கழுவுவது என்பது சாத்தியமா? அவளுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. துக்கம் இருதயத்தைப் பிளந்து கொண்டுவந்தது.

சாவுவீட்டில் யாரும் சமைப்பதில்லை. இறந்தவனின் குடும்பம்

## ஸெவ்டே குத்ரத்

# பசி

முதலில் மறந்துவிடுவது உணவைத் தான். முதல் இரண்டுநாட்கள் வயிற்றில் நிரம்பியிருப்பது பயமும் துக்க உணர்வும்தான். ஆனால் அதன் பின் வீட்டில் உள்ள யாராவது சாப்பாட்டைப்பற்றி பேச ஆரம்பித்துவிடுவார்கள்; வயிற்றுக்குள் போய் உணவு விழுந்ததும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பி விடுவார்கள்.

துக்கத்தில் மூழ்கியிருக்கும் குடும்பத்துக்கு, பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் உணவு கொடுத்து அனுப்புவது ஊர் வழக்கம். குல்நாஸுக்கும் அவளது குழந்தைகளுக்கும் முதல் நாள் உணவு ரஃபி வீட்டிலிருந்து வந்தது. ரஃபியின் பெரியமாளிகை அந்தத்தெருவின் கோடியிலிருந்தது. அவர் பெரிய வணிகர்; செல்வந்தர். அவர் வீட்டிலிருந்து வந்த பகல் உணவுக்குக் கேட்கவா வேண்டும். ஒரு பெரியதட்டில் உணவுப்பதார்த்தங்களை வைத்து மூடி எடுத்துக் கொண்டு அந்த வீட்டு வேலைக்காரி வந்தாள். இனிப்புக்களிலிருந்து இனிய நறுமணம்; மற்றும் சிக்கன் மட்டன் பதார்த்தவகைகள்.

உண்மையில் அன்று யாரும் சாப்பிடும் மனநிலையில் இல்லை. ஆனால் அந்தத் தட்டின் மூடியை எடுத்ததும் கண்ணில்பட்ட உணவு வகைகள், கூடியிருந்தோரை சாப்பாட்டுமேசைக்கு இழுத்தன. அங்கிருந்த அனைவரும் இம்மாதிரி அருமையான உணவை இதுவரை சுவைத்திருந்ததில்லை. சாவு மனதின் உள்உணர்வுகளை மூர்க்கமாகத் தாக்கியதின் வலியில், சாதாரண உணர்ச்சிகளும் மிக்க கூர்மையடைந்திருந்தன. உணவை சுவைத்த நாக்குகள் சப்புக்கொட்டின. அன்று இரவும் மீதமிருந்த உணவை அனைவரும் விரும்பி சாப்பிட்டனர்.

மறுநாள் மற்றொரு வீட்டிலிருந்து உணவு வந்தது. அடுத்த இரண்டு மூன்றுநாட்களும் அவ்வாறே பக்கத்து வீடுகளிலிருந்தும் சாப்பாடு வந்தது. இருந்தாலும் ரஃபி வீட்டிலிருந்து முதல்நாள் வந்த பதார்த்தங்களுக்கு இணையாக அவை இருக்கவில்லை. ஆனால் குல்நாஸ் வழக்கமாகத் தன் வீட்டில் சமைப்பதைவிட அவை நன்றாக இருந்தன. இதேமாதிரி யார் வீட்டிலிருந்தாவது உணவு வந்து கொண்டிருந்தால், குல்நாஸும் அவள் குழந்தைகளும் தங்கள் துக்கத்தை முற்றிலும் மறந்திருப்பார்கள். ஆனால் ஒரு நாள் உணவு வருவது

www.tamilarangam.net

நின்று விட்டவுடன், குல்நாஸ் திடுக கிட்டாள்.

மற்றவர் வீட்டிலிருந்து உணவு வருவது நின்றுவிட்ட நாளன்று அவர்கள் மதியம்வரை எதிர்பார்ப் புடன் காத்திருந்தார்கள். வாசலில் லேசாக ஏதாவது ஒலி எழுந்தாலும், பெருத்த நம்பிக்கையுடன் யாராவது கதவைநோக்கி விரைந்தார்கள். 'ஒரு பெரிய தட்டில் உணவு வகை களை வைத்து மூடி எடுத் துக் கொண்டு பக்கத்து அல்லது எதிர் வீட்டிலிருந்து யாராவது.' ஆனால் கதவைத் திறந்தால், தெருவில் அவர வர் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்க் கொண் டிருந்தார்கள். இரவு நெருங் கியதும் இனி யாரும் வரு வதற்கில்லை என்ற நிச்சய உணர்வு ஏற்பட்டது. குல்நாஸ் தன் வீட்டில் இருப்பதை வைத்து சமைக்க முயன்றாள். கடந்த சில நாட்களாக ருசி கண்ட நாக்கு இப்போது சா தாரண சமையலை வெறுத் தது. அடுத்து சில நாட் களில் வீட்டிலிருந்த எல்லா சாமான்களும் உபயோகிக் கப்பட்டுவிட்டன. ஒரு நாள் காலை சமைப்பதற்கென்று எதுவுமே இல்லை. அன்றிரவு குல்நாஸும் அவள் குழந்தை களும் பட்டினியுடன் படுக் கையில் விழுந்தார்கள்.

மறுநாளும் அதே கதை தான். மத்தியானம் சின்ன வன் "ஐயோ! அம்மா! பசி கொல்லுதே!" என்று அழுது புரண்டான். குல்நாஸ் அவனை சமாதானப்படுத்த முயன்றாள். பசியில் வயிறு சுருண்டது; நின்றால் உலக மே சுற்றுவது போலிருந்தது; உட்காரவும் முடியவில்லை. படுத்தால் கண்களைச் சுற்றி சிவப்பும், பச்சையுமாய் வளை யங்கள் தோன்றின கனவு களைப்போல். காதை அடைப்பது போலிருந்தது. குரல் மிகவும் சன்னமாக வெளிப்பட்டது.

அக்கம்பக்கத்தில் இருப் பவர்களும் குல்நாஸிடம் வேலை வாங்க தயங்கினர்.

"பாவம்! கணவனை இழந்த துக்கத்தில் இருப்பவள். அவளை எப்படிக் கூப்பிடுவது? அவளால் எப்படி வேலை செய்ய முடியும்?...'

ஒருநாள் காலை பேக்கரி ஆள் வாசலில் போய்க்கொண்டிருந்தான். குல்நாஸ் தடுமாறி அவனிடம் சென் றாள். "குழந்தைகள்ளாம் பசியில் துடிச் சிக்கிட்டிருக்கு; ரெண்டு ரொட்டி குடுப்பா. அடுத்த வாரம் பணம் குடுத்துடறேன்" என்றாள் இறைஞ்சும் குரலில். அவனது கூடையில் அடுக் கப்பட்டிருந்த ரொட்டிகள் புதிய சோபையில் மின்னின. அவை புதிய மாவில் செய்யப்பட்டிருக்க வேண் டும். அவற்றைத் தொட்டுப்பார்க்க வேண்டும். கைவிரல்கள் அவற்றின் மென்மையில் கரைந்து போய் விடக்கூடும்! என்ன இனிமையான மணம்! நாக்கு வறண்டு, தொண்



www.tamilarangam.net

டை பரபரத்தது. குல்நாஸ் எச்சிலை விழுங்கினாள். ஆனால் பேக்கரிஆள் அவளைத் துச்சமாகப் பார்த்து விட்டு "போ! போ!" என்றபடி வண்டியைத் தள்ளிக்கொண்டு சென்றான்.

அவள் வீட்டிற்குள் வந்தாள். பசி ஜுரத்தில் இரு பையன்களும் துடித்துக் கொண்டிருந்தனர். அவள் பேசியதை அவர்கள் கேட்டிருக்கக் கூடும். தன்னுடைய வெறுங்கையை எங்காவது மறைத்துக்கொள்ள முடியுமா என்று பார்த்தாள். இரு குழந்தைகளும் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தன. அவள் மூலையில் சென்று சுருண்டு படுத்துக்கொண்டாள். காற்றில்கரைந்து சென்றுவிடமாட்டோமா என்ற விரக்தி படர்ந்தது. 'நான் யாருக்கு என்ன தீங்கு இழைத்தேன்? எதற்காக இந்த சின்னஞ்சிறு பூக்கள் இப்படி வதங்க வேண்டும்? அறையில் அமைதி படர்ந்தது. ஆனால் சற்றுக் கழித்து சின்னவன் "அம்மா! அம்மா!" என்று படுக்கையிலிருந்து அழைத்தான்.

"என்னப்பா?"

"என்னால் பொறுக்கமுடியலேம்மா. பசி கொல்லுது!"

"ஐயோ! என் கண்ணே! நான் என்னம்மா செய்யட்டும்?" என்று அவளும் அழுதாள்.

"அம்மா. வயிறெல்லாம் குத்துது; நான் செத்துப்போகப் போறேன்.!"

அவள் பதறியபடி எழுந்து சென்று அவன் வாயைப்பொத்தினாள். பெரியவன் கண்களைத்திறந்து தம்பியை நோக்கினான். சிறியவன் இப்போது அமைதியாயிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. உதடுகள் வறண்டு, வெளுத்திருந்தன. கன்னம் சுருங்கிக் கிடந்தது. நோஞ்சான் உடம்பு.

பெரியவன் படுக்கையிலிருந்து எழுந்திருக்க அம்மாவும், பிள்ளையும் அறையை விட்டு வெளியே வந்தார்கள். குல்நாஸ் மகனிடம் "எப்படியாச்சும் போடோஸ்கிட்டே போய் கொஞ்சம் அரிசி, கோதுமை மாவு, உருளைக்கிழங்குன்னு வாங்கிட்டுவா. இன்னும் கொஞ்சநாள்ல பணம் தரேன்னு சொல்லு!" என்றாள். அவன் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

அந்த ஜனவரிக் குளிரை அவன் அணிந்திருந்த கிழிந்த கோட்டால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கால்களிலும் பலமில்லை. சற்றுத் தொலைவு நடந்ததும் நின்று சுவற்றைப் பிடித்துக்கொண்டு மூச்சு வாங்கினான். ஸெராப்பாஷா குன்றின் மீதிருந்த கடையை அடைந்தபோது வெகு நேரமாகி விட்டது. அவன், கடையைச் சூழ்ந்திருந்த ஜனங்கள் விலகுவதற்காகக் காத்திருந்தான். அது கடைக்காரனைத் தனியே சந்தித்துப் பேச வாய்ப்பளிக்கும் என்று; அனைவரும் போய்விட்ட பிறகு மளிகைச்சாமான்களை வாங்கிக் கொண்டான். பிறகு காற்சட்டைக்குள் கைவிட்டு, பணம் எடுத்து வர மறந்துவிட்டவன்போல "அட! வீட்டுலயே பணத்தை வெச்சிட்டு வந்திட்டேன் பாய்! இனிமே வீட்டு வரைக்கும் போயிட்டுத் திரும்பறது கஷ்டம். நாளக்கி வரும்போது கொண்டுவந்து தந்திர்றேன் சரியா?" என்று புன்சிரிப்புடன் கேட்டான்.

கடைக்கார போடோஸ் கண்ணாடி ஊடே அவனைப்பார்த்து "அரே! சாமானை எல்லாம் கீழே வச்சிரு; உன்னைப் பாத்தா மாசக் கணக்கிலே சாப்பிடாதவன் மாதிரி இருக்கே! வீட்டுல பணம் வச்சிருக்கிறவன் இப்படிக் காஞ்சுகிடக்க மாட்டான். போ, போ!' என்று விரட்டிவிட்டான்.



வெறுங்கையுடன் இப்போது வீட்டுக்குத் திரும்புகையில், இன்னும் குளிர் அதிகமாகி விட்டது போலிருந்தது. ரஃபி முதலாளியின் வெண்மைச் சுவர்களாலான வீட்டில் விளக்குகள் எரியத்தொடங்கி விட்டன. எவ்வளவு அருமையான வீடு! அங்கு குடியிருப்பவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். கொடுத்து வைத்தவர்கள்! அவன் அவர்கள் மீது பொறாமைப் படவில்லை! அவர்களின் அதிர்ஷ்டத்தையும், அவர்கள் அவனுக்கு வாழ்நாளிலேயே கண்டிராத சிறந்த உணவைக் கொடுத்ததையும் நினைத்துப் பாராட்டினான்!

குளிரில் பற்கள் தாளமிட, அவன் வீட்டை நோக்கி விரைந்தான். அம்மாவிடமும், தம்பியிடமும் எதுவும் பேசவில்லை. அவனது வெறுங்கை அவர்களுக்கு வேண்டிய பதிலைத் தந்துவிட்டது.

நேரே படுக்கையில் போய் விழுந்தான். படுக்கை சூடாக இருந்தாலும், உடம்பு குளிரில் நடுங்கிற்று. குல்நாஸ் கம்பளியை எடுத்து அவன் மீது போர்த்தினாள். இருந்தும் அவனது உதறல் நிற்கவில்லை. உடல் மீது போர்த்தியிருந்த போர்வைக் குவியல மேலும் கீழும் ஏறி இறங்குவதை குல்நாஸ் அச்சத்துடன் நோக்கியபடி இருந்தாள். சற்று நேத்தில் குளிர்ஜுரம் பெரியவனைத் தாக்க ஆரம்பித்துவிட்டது. கண்கள் வெறிக்க, அசையாமல் அவன் படுத்திருந்தான். பதைப்புடன் குல்நாஸ் அவன் போர்வைகளை விலக்கி மிகச் சூடாக இருந்த அவன் கையை, ஜில்லென்றிருந்த தன் கையுடன் பிணைத்துக்கொண்டாள்.

பொழுது நகர்ந்துகொண்டே இருந்தது. பதற்றத்துடன் குல்நாஸ் வீட்டுக்குள் ஒடுங்கிக்கிடந்தாள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவர்களையும், ஜன்னல்களையும், தரையையும் பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. திடீரென்று தனக்குப் பசியே இல்லை என்று அவள் உணர்ந்தாள். பசி எல்லா அவயவங்களையும் ஒடுக்கிக் கொன்று போட்டது போலிருந்தது. சிறியவன் பசிமயக்கத்தில் தூங்காமல் படுத்துக்கிடந்தான். அவன் கண்கள் அண்ணன் மீது நிலைத்திருந்தது. நோயாளிப்பையன் மெல்ல முனகினான். அவன் உடம்பு நோயின் உபாதையில் முறுகிற்று; மயக்கத்தில் பிதற்றலாகப் பேச்சு வெளிப்பட்டது; கூரையை நோக்கி அவன் கண்கள் விழித்தன; கண் விழிப்புத்தான், பார்வை இல்லை. வெறித்த நோக்கு; இளையவன் கூர்ந்து அண்ணனைப் பார்த்தான். அவனோ, மறுபடியும் மயக்கத்தில் பிதற்ற ஆரம்பித்தான்.

சிறியபையன் அம்மாவுக்கு மட்டும் கேட்கும் மிக மெல்லிய குரலில் "அம்மா! அண்ணன் செத்துப் போயிடுமா?" என்று கேட்டான்.

உடல்மீது மிகக் கூரிய குளிர்க் காற்று பட்டுவிட்ட மாதிரி ஒரு நடுக்கம் ஏற்பட்டது குல்நாஸுக்கு. மிரண்ட விழிகளுடன் அவனைப் பார்த்து "பாவி! என்னடா உளறுகிறாய்?" என்று அதட்டினாள்.

அவன் அம்மாவையே மௌனமாக சில வினாடிகள் பார்த்தான். பிறகு அண்ணனுக்குக் கேட்கக் கூடாது என்று கருதியவன்போல் அம்மாவின் காதில் முணுமுணுத்தான்:

"அப்பிடி ஆச்சுன்னா, ரஃபி அங்கிள் வீட்டிலிருந்து சாப்பாடு வருமில்லே?" ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிப்பு வேகம்!

– சிவன் –

## யுத்தமும் மக்களும்

* யாழ் மாவட்டத்தில் உணவு, மருத்துவ வசதிகள் இன்றித் தினமும் 15பேர் உயிரிழப்பதாக ஆய்வு ஒன்று கூறுகிறது.

* கடந்த ஆண்டு வடபகுதியில் பலதரப்பட்ட நோய்களுக்கு உள்ளாகியும், யுத்தத்தினாலும் 1,600க்கு மேற்பட்டோர் இறந்திருப்பதாக மாவட்ட வைத்தியசாலை மற்றும் வைத்தியத் திணைக்களத் தகவல் ஒன்று கூறுகிறது. கடும் நோய்க்குள்ளாகிப் பிற மாவட்டங்களில் இருந்து மேலதிக சிகிச்சைக்குக் கொண்டுவரப்பட முடியாதநிலையிலும், ராணுவ நடவடிக்கைகளாலும் பிற மாவட்டங்களில் அதிகம்பேர் மரணமடைந்துள்ளனர்.

* வடக்கு கிழக்கில் பிரசவமாகும் குழந்தைகள் போஷாக்கின்மையால் நலிவுற்றுப் பிறக்கிறார்கள். யுத்தத்தால் 35% சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

* யாழ், மன்னார் மாவட்டங்களில் அகதிமுகாம்களில் 250க்கு மேற்பட்ட சிறுவர்கள் (12 வயதுக்குக் கீழ்) நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்குப் பலியாகியுள்ளனர். 400க்கு மேற்பட்ட குழந்தைகள் பிறந்தஉடன் இறந்துள்ளதுடன், பல குழந்தைகள் இறந்த நிலையில் பிறந்துள்ளன.

* வடக்கு கிழக்கு மக்களின் தொகை 17லட்சத்தில் இருந்து ஒன்பது லட்சமாகக் குறைந்துள்ளது. (மேற்கத்தைய நாடுகளுக்கு மூன்று லட்சம் அகதிகளும், இந்தியாவில் இரண்டுலட்சம் அகதிகளும் உள்ளன. மூன்றரை லட்சம் பேர் வடக்கு கிழக்கிலேயே இடம்பெயர்ந்த அகதிகளாக உள்ளனர்)

* கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த 40,000பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த 54,000பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். மீன்பிடி பாதியாகக் குறைந்துள்ளது.

* 83க்குப் பின் வடக்கு கிழக்கில் 50,000பேர்வரை போரினால் கொல்லப் பட்டுள்ளனர்.

* 53 தொழிற்சாலைகள் விமானத் தாக்குதலால் அழிக்கப் பட்டுள்ளன. காங்கேசன்துறையில் உள்ள சீமெந்துத் தொழிலகங்கள் இரண்டும் குண்டுவீச்சால் தகர்க்கப் பட்டுள்ளன.

தகவல்: அறவழி செய்திக் கதிர், கைதடி, இலங்கை. 1993 மாசி

www.tamilarangam.net

# என்னில் புயல்

● எம்.எஸ்.எம். அன்ஸார்

நீ அழு.
இரண்டு கண்கள் போதாது என்றால்
இன்னும் நாலைந்து பொருத்தி.
வாங்குகின்ற உதைகளின் நோவுகளை
விழிகளில் கரைத்து
வெறும் கண்ணீராய்க் கொட்டு.
சும்மா அழு.

முடியவில்லை என்னால்.
எதிரியின் சந்தோசங்களை
எனது சோகத்தின் எண்ணிக்கையால் பெருக்க.
காதலியின் கடிதங்களைப் போல
அவன் தருகின்ற காயங்களைச் சேமிக்கிறேன்.
எனது துப்பாக்கிகள்
ஓய்வியும் கூட சன்னங்களால் நிரம்பியிருக்க.

நீ அழுது கொண்டிரு.
இறந்த மரத்தின்
கந்துகளைத் தறிக்கின்ற மாதிரி
உன் தாயின் கழுத்தை வெட்டுகிறான்.
தம்பியின் நெஞ்செல்லாம் குண்டுப் பொத்தல்கள்.
ஏன் உன் இரத்தத்தில்
நெருப்பு எரியவில்லை இன்னும்?

ரோசங் கெட்டு அழு.
உனது சாவுக்கும் சேர்ந்து.
எனது கண்களில் ஈரத்தை எதிர்பாராதே.
கருணை எனது மக்களுக்கு, மக்களுக்கு மட்டும்தான்.
எதிரி! அவனைக் காணுகையில்
எனது கண்களில் இருந்து குண்டுகள் விழும்.
அழு, நீ மட்டும்.

இன்னும் ஆனமட்டும்.
ஆனால் என்னை சும்மா இருக்கப் பணிக்காதே.
கல்லு மலை போல் குந்தி.
அவனை அழிக்க என்னில் புயல்.
சுழலும் எனக்கு
இன்னொரு துப்பாக்கி வாங்கித் தா.
இனி அழு.
காக்க நான்.
1998 / 01 / 03.

www.tamilarangam.net

பகிரங்கக் கடிதத்தொடர்

# ராமனின் பதில்

அப்பளச்சாரியாருக்கு

# பகிரங்க கடிதம்!

அப்பளாச்சாரியாருக்கு!

வெள்ளனவே வந்திட்டியள் போலை கிடக்கு. ரொம்பவும் சந்தோஷம்தான். நிறைய விசயங்கள் எனக்கும் தெளிவில்லை, கற்றுக்குட்டிதானே. ஏதோ எழுதிப்போட்டியள் எண்டதுக்காக எழுதிறன். நீளமாகுமோ தெரியாது. பிறகு, ராமர்கதை கேட்டதுமாதிரி விளங்காமலும் போயிடுமோ எண்டு பயமாயும் கிடக்கு.

என்னட்டக் கேட்டால் வடக்குக் கிழக்கைப் பிரித்துப் போடுவது சரியெண்டு ஒருக்காலும் சொல்லமாட்டன். அது உருப்படியான எந்தத் தீர்வையும் எமக்குத் தராது. பாராளுமன்றத் தீர்வில் எனக்கு இம்மியளவும் நம்பிக்கை கிடையாது. பிரித்துப் போட நினைப்பது, தமிழ்பேசும் மக்களின் வேட்டி அவிழ்ப்புத்தான். வட – கிழக்கைப் பிடியாய்ப் பிரித்துப் போடுவது, இன்று நேற்று அரசுக்கு ஏற்பட்ட நோக்கமல்ல. இது பதவியா போன்ற திட்டமிட்ட குடியேற்றங்களால் தெளிவாகியது. இந்தப் பிரிப்பின் முக்கிய நோக்கம் தமிழ், முஸ்லிம் மக்களைப் பலமற்ற இனக்குழுக்களாகச் சிதைப்பதே. இதில் ஒரு பகுதியைத்தான் இன்று விடுதலைப் புலிகள் செய்திருக்கிறார்கள் – தமிழ்பேசும் முஸ்லிம் மக்களை வடக்கிலிருந்து விரட்டியதைத்தான் சொல்கிறேன்.

இன்று, வட – கிழக்கு பிரிக்கப்படுவதற்கு எதிராகப் புலிகளும் குரல் கொடுக்கின்றனர். இது சரியானது; வரவேற்கப்பட வேண்டியது. ஆனால் நிபந்தனைகள் எதுவும் இன்றி உடனடியாக முஸ்லிம் மக்களை வடக்கில் மீளக் குடியமர்த்தவும் வேண்டும். அவர்களது சுயபாதுகாப்பு மற்றும் தேசிய அந்தஸ்தும் கௌரவிக்கப்பட்டே ஆகவேண்டும். இவையெல்லாம் செயல்வடிவம் பெறாவிடில், புலிகளின் இன்றைய விருப்பும் (வட – கிழக்கு இணைப்பு), வேறு அர்த்தமாகிவிட்ட அவர்களது போராட்டமும் மேலும் அம்பலம் ஆகியே தீரும். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

'ஒன்றுபட்ட இலங்கை'க்குள் தீர்வு சாத்தியம் என்பதும் வெறும் பம்மாத்தே. 'பண்டல் வெடி' என்றும் சொல்லலாம். எந்த முரண்பாடும் சரியான அடித்தளம் இன்றி வளர முடியாது, அதன் விரிவான பாதையையும் எடுக்காது. இன்றைய இன முரண்பாடும் இவ்வாறான ஒன்றே. அது, அந்தரத்தில் வளர்ந்துவிடக்கூடிய ஒன்றல்ல. இதன் வளர்ச்சிக்கான பொருளாதார அடித்தளத்தை இலங்கை இன்னும் கொண்டேயுள்ளது. இதன்மீதே அரசு தனது இருப்பையும் நிலைநிறுத்தி வருகிறது. இந்நிலையில் இனப்பிரச்சனையைத் தடுத்து

www.tamilarangam.net

நிறுத்துவதோ, முடிவுக்குக் கொண்டு வருவதோ, அடித்தளத்தையே முற்றாக மாற்றுவதாகும். இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்பது அடித்தளத்தையும், அதன் அரசுகளையும் இல்லாது ஒழிப்பதே ஆகும். அல்லாத எதுவும் 'றீல்' விடுவதேயன்றி வேறில்லை.

இந்நிலையில் (ஐ.தே.க.) அரசு இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முயல்கிறதெனில் அது தனக்குத்தானே 'சவக்குழி' வெட்டுவதேயாகும். இப்ப நீர் சொல்லும், அரசு இதைச் செய்யுமா? பாராளுமன்றத்திற்குள் தீர்வு கிடைக்கும் என நம்புவது முட்டாள்தனம், இல்லையா? இப்படி எதுவும் இல்லாமல் இதய சுத்தியோடு இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முற்படுபவர்கள் எவராக இருப்பினும், அது அனைத்து மக்களதும் பரிபூரண விடுதலையை வேண்டுவதைத் தவிர வேறொன்றாக இருத்தல் முடியாது.

இனப்பிரச்சனை என்பது, இரு இனங்களுக்கு இடையிலான பிரச்சனை. அதாவது, (இலங்கையில்) பிரதானமாக தமிழினத்துககும் (தமிழ் பேசும் மக்களுக்கும்), சிங்கள இனத்துக்கும் (சிங்கள மொழிபேசும் மக்கள்) இடையிலான பிரச்சனை. இந்தப் பிரச்சனைக்கு அடிப்படை எதுவெனில், முதலாளித்துவ வளர்ச்சியை எட்டிப் பிடிக்கவே முடியாத இலங்கை போன்ற நாடுகளில், அதாவது காலனித்துவ சுரண்டலுக்கு உட்பட்ட நாடுகளில் - தரகர்களுக்கு இடையிலான சந்தைப் போட்டியே காரணமாக அமைகிறது. காலனித்துவத்திற்கு ஏகவிசுவாசமாக உள்ள அரசு, எமது செல்வங்களை மூட்டை மூட்டையாகத் தாரைவார்த்துக் கொண்டே இருக்கும். இதைச் சகித்துக்கொள்ள முடியாத அனைத்து மக்களும், அரசுக்கு எதிராகப் போராட முற்படுவர். இதை நன்கறிந்த அரசும் தனது எசமானர்களது 'கிளிச்சொல்'லுக்கு இணங்க இனமுரண்பாட்டை வளர்த்து, அனைத்து மக்களின் பகையையும் சம்பாதிக்காது (ஒருபகுதி எதிர்ப்பை மட்டுமே கொண்டு) தனது இருப்பைப் பேணி வருகிறது. அரசு தனது இருப்பை நிலைநிறுத்தித் தொடர்ந்து பேண, இனப்பிரச்சனையை (இனமுரண்பாட்டை) உச்ச நிலைக்குக் கொண்டுவந்தது. இதனால் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளான தமிழ்பேசும் சிறுபான்மை இனத்தின் தலையில் பேரிடியாக விழுந்தது. இதற்கு முகம்கொடுத்துத் தமிழினம் போராட்டத்தில் குதித்தது. இப்போராட்டங்களை ஆயுதத் துணைமூலம் அடக்க அரசு முனைந்தது. பெரும் இனக்கலவரங்களைக் கட்டவிழ்த்தும் விட்டது. இதனால் தமிழினத்தின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் நாசம் ஏற்பட்டது. இதனால் அரசு அனைத்துத் தமிழ்பேசும் மக்களது பகையையும் சம்பாதித்தது. இந்தப் பகையுணர்வைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள தமிழ்த் தரகு முதலாளிகள் முயன்றார்கள். இந்தப் போராட்டத்தைத் தமது தலைமையில் கொண்டு சென்றார்கள், போராட்டத்தைக் காட்டிச் சந்தையில் பங்கு கேட்டார்கள். அரசு இதற்கு மசியவில்லை. எனவே தமக்கென ஒரு அரசை நிறுவி (தனிநாடு) தமிழினத்தின் செல்வங்களை மூட்டை மூட்டையாகத் தாரைவார்த்து, கூலிக்கு மாரடிக்கும் தமது தரகுத் தொழிலைப் பேணிக்கொள்ளவே இவர்களும் முனைந்தார்கள்.


சுந்தரலிங்கம், நவரத்தினம் (சுயாட்சிக் கழகம்) போன்றவர்களால் முன்வைக்கப்பட்ட 'தமிழீழக் கோரிக்கை', மீள்பரிசீலனை இன்றி, 70களில் தமிழ் மாணவர் பேரவையால் முன்வைக்கப் பட்டது. உயர்கல்விக்கு ஆப்புவைப்பு, வேலை வாய்ப்பின்மை போன்றவைகளால் (யாழ்) மத்தியதர வர்க்கம் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்த காலம் அது. அக்காலத்தின் சமூகச் சூழல், காலத்தின் தேவை போன்றவை கணக்கில் எடுக்கப் படாமல், எடுத்த எடுப்பில் வெறும் சுயவிருப்பின்பேரில் இக் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

யாழ் மத்திய வர்க்கத்தின் அரசியற் பங்கும், தேவையும் இதுவாகவே இருந்ததால், யாழ்ப்பாணத்தில் இதற்குப் பெரும் மவுசு கிடைத்தது. இக்கோரிக்கை பிரபலம் அடையும் விதத்தில் அன்றைய ஐக்கிய முன்னணி அரசும் நடந்துகொண்டது.

- 71இல் ஜேவிபியின் ஏப்ரல் கிளர்ச்சி, அது ஒடுக்கப்பட்ட விதம்

- 72இல் குடியரசுப் பிரகடனமும், சிறுபான்மை இனத்துக்குப் பாதிப்பளித்த 'டொனமூர்' திட்டத்தின் 29வது ஷரத்து நீக்கப் பட்டமையும்

www.tamilarangam.net



"அவர் ஒரேநாளில் வியாபாரத்தில் பெரிய கோடீஸ்வரர் ஆகிவிட்டார்!"
"அப்படி என்ன வியாபாரம்?"
"பழைய டயர் இரக்குமதி செய்து அரசுக்கு கொடுக்கிறார்!"

• ஈழத்தோன்,

- 72இல் அறிமுகமான பல்கலைக்கழக அனுமதித் தர்பபடுத்தல்
- 74இல் தமிழாராய்ச்சி மாநாட்டில் பத்துப் பேர் பலி
- சிவகுமாரனின் தன்னலமற்ற உயிர்த்தியாகம்
- 76இல் புத்தளம் பள்ளிவாசலில் 5 முஸ்லிம் மக்கள் படுகொலை
- 50இன் தொடர்ச்சியாக வந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்
- இதைவிட இன்னொரு முக்கிய அம்சமாக பங்களாதேஷ் தனிநாடானமை போன்ற காரணிகளால் தமிழீழக் கோரிக்கை பிரபலமானது.

77இல் கூட்டணியினர் இதைத் தேர்தற் பிரசாரம் ஆக்கினர்; வெகுஜன ஆதரவுடன் பெரும் வெற்றி கிடைத்தது. இருந்தும் என்ன பலன்? 77இல் ஆட்சிக்குவந்த ஐ.தே.க. தொடர்ந்தும் ஒடுக்குமுறையைப் பிரயோகித்து, எந்த அரசு வந்தாலும் இதைச் செய்யும் என உச்சந்தலையில் அடித்துச் சொன்னது. வந்த வரத்திலேயே (77) இனக்கலவரத்தையும் கொண்டுவந்தது. கூடுதலாக மலையக மக்களின் மானத்தையும், உயிர்களையும் பறித்து இக்கலவரம் அச்சுறுத்தியது.

மேலும் ஐ.தே.க. அரசு,

- 79இல் அவசரகாலச் சட்டத்தை இயற்றி, இன்பம் செல்வம் போன்றோரைப் பயங்கரமான முறையில் சித்திரவதை செய்தது.
- 81இல் யாழ் கலைபண்பாட்டு நூலக எரிப்புடன் யாழ்நகரையும் தீக்கிரையாக்கியது.
- 83இல் 53 தமிழ்ப் போராளிகளைச் சிறையில் படுகொலை செய்ததுடன், திட்டமிட்ட இனப்படுகொலையை நாடு முழுவதும் நடத்தியது

இவ்வரசின் 'திறந்த பொருளாதாரக் கொள்கை' நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இது புதுவகை (நவ)காலனித்துவச் சுரண்டலுக்கு வழிவகுத்தது. அதற்கெதிராகப் போராடுமளவில் சிங்களத் தேசியவாதம் இருந்திருக்கவில்லை; அது ஏற்கனவே பௌத்த பேரினவாதத்திற்குள் மூழ்கிப் போயிருந்தது. 'சுதந்திர வர்த்தக வலயம்', 'விவசாய மேம்பாட்டு வலயம்' போன்றவற்றிற்காக ஏராளம் நிலங்கள் வெளிநாட்டவருக்கு வழங்கப் பட்டன. இவ்வாறு நவகாலனித்துவச் சுரண்டலுக்கு 1982வரை 1,10,250 ஏக்கர் நிலங்கள் வழங்கப் பட்டன. ஏற்கனவே வேலையின்மை, நிலப்பிரச்சனை போன்றவற்றால் பாதிப்புற்றிருந்த சிங்கள மக்களை இது பெரிதும் பாதித்தது. இதனை ஈடுசெய்யப் பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களில் அரசபடையின் உதவியுடனும், பௌத்த நிறுவனங்களின் ஒத்தாசையுடனும் அத்துமீறிய குடியேற்றத் திட்டங்கள் ஊக்குவிக்கப் பட்டன. 'கடல் கண்காணிப்பு வலயம்' போன்ற திட்டங்களால் அரசு தமிழ் மக்களது பொருளாதார வாழ்வில் நேரடியாகக் கைவைத்தது. இவ்வாறு தொடர்ந்துவந்த அரசுகளது இன அழித்தொழிப்பு, தமிழ் மக்களின் போராட்டத்தை வெறும் மொழி உரிமைப் போராட்டமாக அல்லாமல் பரிபூரண விடுதலைக்கான போராட்டமாக வளர்ச்சியுறவும் உதவியது.

பௌத்த பேரினவாதத்திற்கு முகம் கொடுத்துவந்த தமிழ் பேசும் மக்கள் தமக்குள்ளேயே தமிழ்த் தேசிய இனம், மலையக மற்றும் முஸ்லிம் தேசிய சிறுபான்மை

www.tamilarangam.net

இனங்களை உள்ளீடாகக் கொண்ட இனச் சேர்க்கையைக் கொண்டுள்ளது. இந்நிலையில் தமிழ்த் தேசிய இனம் தனது விடுதலையைக் கோருவதும் தனது தாயகப் பிரதேசமான வடகிழக்கைத் தமிழீழப் பிரதேசமாய்க் கொள்வதும் நிச்சயம் சரியானதே. தமிழ், முஸ்லிம் மக்களது தாயகப் பிரதேசமாக வட - கிழக்கும் இருப்பதாலும் இவர்கள் ஒரு தேசிய இனமாக வளரமுடியாமல் இருப்பதாலும் (சிதறி வாழ்வதால்) இவர்களது போராட்டம் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்துடன் இணைந்தே நடத்தப்பட வேண்டியதாய் உள்ளது. வேறுவழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆயினும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் முஸ்லிம் மக்களது தனித்துவத்தையும், சுயகௌரவத்தையும் அங்கீகரிப்பதால் மட்டுமே இது சாத்தியம். இதை விடுத்து அனைத்துத் தேசிய பிரிவுகளையும் உள்ளிட்ட தமிழீழத்தைக் கோருவதும், மறைமுகமாக அவர்களது தனித்துவத்தை மறுப்பதும் செருப்புக்கு அளவாகக் காலை வெட்டுவதற்கு ஒப்பானதாகும்.

இந்நிலையில் தமிழினத்தின் இனநெருக்கடி காரணமாக முன்வைக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கையும் (போராட்டமும்) தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் ஒன்றுதானா என்ற கேள்வியும் எழுந்தது. தமிழீழக் கோரிக்கை தமிழ்த் தரகுமுதலாளிகளின் சந்தைக்கான பிரிவினைப் போராட்டம் எனவும், தமிழ்த் தேசிய விடுதலை வேறு எனவும் கூறிப் பல இடதுசாரிகள் (ஒருசில இடதுசாரிக் கட்சிகள் நீங்கலாக) தமிழீழப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கி நின்றார்கள். அரசு ஒடுக்குமுறையானது தமிழ் மக்களது உயிருக்கு உத்தவாதமற்ற நிலையைத் தோற்றுவித்தபோது, தமிழீழப் போராட்டம் வெறும் உதிரி நடவடிக்கை என்ற நிலையில் இருந்து, தேசத்தை விடுவிக்கும் போராட்டமான தேசிய சுயபாதுகாப்பு யுத்தமாக மாறியது.

தேசிய சுயபாதுகாப்பு யுத்தம் என்பது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒருபகுதியே ஆகும். தமிழீழப் போராட்டம் சகல பரிமாணங்களிலும் தேசிய விடுதலைக்கான முழுமையான அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை என்பது அப்பட்டமான உண்மை. எமது தேசத்தை மீட்டெடுக்க நிகழும் யுத்தம் என்ற வகையில் நிச்சயமாக இது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஓரங்கமே ஆகும். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கூட்டியோ குறைத்தோ பார்ப்பது பெரும் அழிவுக்கே இட்டுச் செல்லும்.

தமிழீழப் போராட்டத்திற்கும் சரி, தமிழ்முஸ்லிம் மக்களது தேசிய எழுச்சிக்கும் சரி, இதுவரையில் சரியான தலைமைகள் கொடுக்கப்படவே இல்லை. வடக்கு கிழக்கில் வாழுகின்ற தேசிய, தேசிய சிறுபான்மை இனங்களின் போராட்டங்களைச் சரிவர இணைத்து நடத்தச் சரியான ஸ்தாபன பலமோ, அரசியற் பலமோ இதுவரையில் எந்த அமைப்பிடமும் இருந்ததாகவும் தெரியவில்லை. இதனாலான விரக்தி, கையாலாகாத் தன்மை, விருப்புவெறுப்பு எல்லாமே எம்மை நெருக்கடிக்குள் தள்ளுகிறது. சமரசத் துணிவு, இனவாத வாந்தியெடுப்பு, பிரிவினை, சமஷ்டி போன்றவற்றிற்கும் தள்ளிவிடுகிறது. இது மன்னராட்சிக்கு உட்படுத்தப் பட்டிருந்த இனக்குழுமங்களை ஒன்றுசேரக் கட்டிப் போட்டதன் பலாபலன் என்றுகூடச் சொல்லலாம். மக்களிடம் இருந்து வரும் கிராமிய உணர்வு/ கேந்திர உணர்வுகளின் பிரதிபலிப்பும், இன உணர்வையும் தேசிய உணர்வையும் ஊட்டி வளர்க்காததன் கைமாறும், இன்றைய நெருக்கடிகளின் பிரதான முனைப்புகளாகும்.

வடக்கு கிழக்கில் (தமிழீழத்தில்) வாழுகின்ற சகல ஒடுக்கப்படும் தேசிய பிரிவினரையும் உள்ளடக்கிய ஒரு பலமான முன்னணியினால் தமிழீழப் போராட்டம் முன்னெடுக்கப் படாமையால் இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பது சரியாகப் பொருந்துமோ எனக்குத் தெரியாது. ஆனால் முற்போக்குத் தேசியவாதத்தால் இது தூக்கி நிறுத்தப்பட வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். தேசபக்தர்கள் அனைவரும் இன்றைய அராஜகம், குறுந்தேசிய வெறி, அந்நிய சக்திகளிடம் போராட்டத்தைத் தாரைவார்க்கும் போக்கு ஆகியவற்றிற்கெதிராக விடாப்பிடியாகப் போராடுவதும், உணர்வுபூர்வமாக இன்றைய தமிழீழப் போராட்டத்தைச் சரியான திசைவழிக்கு நகர்த்துவதும் அதனூடு மக்கள் விடுதலையை உறுதிசெய்து கொள்வதுமே தலையாய பணிகளாகும். இவ்வாறு இல்லையெனில்

www.tamilarangam.net

அனைத்துத் தமிழ் மக்களும் புதைகுழி நோக்கித் தள்ளப்படுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தவே முடியாது. மக்களின் வாழ்நிலையை எதிரி அழிக்க முற்படும்போது, மக்கள் வாழ்வதற்காகப் போராட முன்வருவது இயல்பானதே. இந்த நிலையானது சுயபாதுகாப்பு யுத்தத்தில் போரிடும் முனைக்குப் பலமான அத்திவாரத்தை வழங்குவதில் மக்களுடைய நேரடிப் பங்களிப்பை அதிகரித்தே வந்திருக்கிறது. போர்முனைக்காக ஆயிரக் கணக்கில் போராளிகள் அணிவகுத்துச் செல்வதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

ஆனாலும் இவையெல்லாம் பயனற்று, ஒருகையளவு பிரயோசனமும் இல்லாமல் விழலுக்கு இறைத்த நீராகத் தரகுமுதலாளித்துவ சக்திகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இனவாதத்திற்குள் தமிழ்த் தேசியவாதமும் மூழ்கிப் போய் ஆயுத பயங்கரவாதமாக மாறிவிட்டது. தரகுமுதலாளிகள் தமிழீழப் போராட்டத்தில் தமது தலைமையைப் பிடியாக நிறுத்திக்கொள்ளப் பலவகைகளிலும் முயன்று வருகிறார்கள். வட - கிழக்கில் வாழும் தேசிய, தேசிய சிறுபான்மை இனங்களுக்கிடையில் இனமுரண்பாட்டை ஊக்குவித்து அதில் தமது ஆயுதப் பயங்கரவாதத்தை நிலைநாட்ட முற்படுகிறார்கள். மறுபுறத்தில், அரசுக்கு முதுகுசொறியும் தரகுமுதலாளிகளோ வடக்கு கிழக்கு மக்களுக்கு இடையில் இருந்துவரும் அரசியல் முரண்பாட்டை (யாழ்.தலைமை) பகைமுரண்பாடாக்கி, வடக்கு கிழக்கைப் பிரிக்க முரண்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் பிரிவினைவாதிகள் எனப் புரிந்துகொள்வது அவ்வளவு கடினமான ஒன்றல்ல.

முடிவாய்ச் சொல்வதெனில் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான முரண்பாடு அரசியல் முரண்பாடே. இது பகைமுரண் அல்ல. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குச் சரியான தலைமையைக் கொடுப்பதால் மட்டுமே இம்முரண்பாட்டைச் சரியாகத் தீர்த்துக்கொள்ள முடியும். வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது பிரிவினைவாதமே. வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட முடியாதவை என்று கபடத்துடன் புலிகள் சொல்வதும் வடக்கு கிழக்கை இலங்கையில் இருந்து முற்றாகப் பிரித்தெடுக்கும் பிரிவினைவாத நோக்கிலேயே. இதுவும் வெளிப்படையான சந்தைப் பிரிவினையே. ஆனால் தமிழ் மக்களின் தேசிய விடுதலை நீதியானது. இது முழுத்தேசிய (இலங்கை) விடுதலையின் ஒரு பகுதியும்கூட. உடனடியாகத் தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசைக் கோருவதுகூட, முழு இலங்கையின் தேசிய விடுதலையின் பகுதிப் போராட்டமேயாகும். தேசிய விடுதலையானது வர்க்க விடுதலையில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாதது என்பதால் இது முழு இலங்கையின் பாட்டாளி வர்க்கவிடுதலையின் முதற்கட்டமே ஆகும். நீண்டகால நோக்கில் இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் சுபீட்சமாக வாழும் பரிபூரண விடுதலையுமாகும். இவ்வாறு எமது தேசம் நிமிர்ந்து எழுவதால் நாம் எதை இழந்துவிடப் போகிறோம்? உமக்கு டிமிற்ரோவின் கவிதை ஒன்றை ஞாபகப் படுத்துகிறேன்.

*'சரித்திரத்தின் சக்கரங்கள் நிற்பதில்லை*
*சிறைவாசம், மரணதண்டனை அல்லது*
*எவ்வித அழிவு வேலையின் மூலமும்*
*அதை நிறுத்துவதில் யாராலும் வெற்றிபெற*
*– முடியாது*
*சரித்திரத்தின் சக்கரங்கள்*
*– சுழன்றுகொண்டிருக்கிறது*
*அது கம்யூனிஸத்தின் இறுதிவெற்றியை நோக்கி*
*சுழன்றுகொண்டே இருக்கும்'*

இதுவே எனது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும்கூட. நிறைய, நிறையவே வாசி, எழுது. எதுவாகிலும் சந்தேகங்களை எழுது. கேள்வி இல்லாமல் எதையும் ஏற்காதே. போராடிப் பெறுவதுதான் சுதந்திரம் என்பதில் நம்பிக்கைகொள்.

ப்பிரியமுடன்,
ராமன்
மாசி'93

www.tamilarangam.net




மார்ச் 1

* கிளிநொச்சியில் வாந்திபேதி நோய் ஏற்பட்டுள்ளதால் ஐந்து கிராமங்கள் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.

* ராஜீவ் கொலை வழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட உள்ளது. ஒரு ஆஜராக அமெரிக்காவில் இருந்து வழக்கறிஞர் ஒருவர் வருகை. அவர் வழக்கில் தோற்ற சட்டம் அனுமதிக்காததால் அனுமதி மறுப்பு.

* சுதந்திரக் கட்சி தலைமையில் ஆறு கட்சிகளின் கூட்டணி அமைப்பு. (சு.க, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ற் க., ஸ்ரீலங்கா மக்கள் க., தேசவிடுதலை மக்கள் கட்சி)

மார்ச் 5

* அரசியற் தீர்வில் அக்கறை இருப்பின் புலிகள் தெரிவுக்குழுவுக்கு யோசனைகளை அனுப்பட்டும் - ரணில் விக்கிரமசிங்ஹ

* ஐ.தே.க, சு.கட்சிகளின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான யோசனை என்ன - குமார் பொன்னம்பலம் பிரேமதாசாவுக்கு எழுதிய கடிதத்தில்

மார்ச் 6

* கிளாலி கடலேரிப் பாதையைத் திறக்க அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பு புதுமுயற்சி

* ஈபிஆர்எல்எஃப் புதிய இந்தியத் தூதரைச் சம்பிரதாய ரீதியில் சந்தித்தது.

* சமஷ்டியை ஏற்கலாம் என்ற பிரபாகரனின் பேட்டியை ஈபிஆர்எல்எஃப், குமார் பொன்னம்பலம் வரவேற்பு

* யாழ்ப்பாணத்தில் அன்ரன் பாலசிங்கம் - அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரியுடன் பேச்சு

* இனப்பிரச்சனை குறித்து விவாதிக்கத் தயார் - பிபிஸியில் பிரேமதாசா

* சைக்கிள் உதிரிப்பாகங்கள் கொண்டு செல்ல அனுமதி தேவை என வவுனியா ஆசிரியர்கள் கோரியுள்ளனர்.

மார்ச் 10

* புலிகளின் பேரால் கல்முனைக்கருகில் கொள்ளை

* 'பூரண சந்திரன்' ராணுவ நடவடிக்கையால் செட்டிகுளம் ரயில் நிலையம் கட்டுப்பாட்டில் வந்தாக அரசு அறிவிப்பு

* அமெரிக்காவுடன் ஒருகோடி ரூபா பெறுமதியான கோதுமை ஒப்பந்தம் (பி.எல் 480) செய்யப் பட்டுள்ளது

* ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவை நிறுத்துவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பான எதிர்க்கட்சிக் கூட்டணி தீர்மானம்

மார்ச் 11

* (கிட்டு உயிருடன் இருப்பதாகக் கருதி) கிட்டுவை நீதிமன்றில் சமர்ப்பிக்க நெடுமாறன் ஆட்கொணர்வு மனு

* கொங்கிரஸ் கட்சியுடன் உறவு முறிந்ததாக ஜெயலலிதா அறிவிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வழக்கில் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் எதிரிகளாகவும், மற்றதில் கைதாகியுள்ளோர் எதிரிகளாகவும் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

* வடக்கு கிழக்கில் மூவின மக்களும் அச்சமின்றி வாழ யோசனையைத் தெரிவுக்குழுவிடம் தமிழ், முஸ்லிம் கட்சிகள் சமர்ப்பிக்க வேண்டும் - பிரேமதாசா

மார்ச் 3

* தமிழ் மக்களது தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்தால் சமஷ்டி யோசனை பற்றி ஆராயத் தயார் - பிபிஸியில் பிரபாகரன்

* மட்டக்களப்பு மயிலந்தனையில் 35 தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டமை தொடர்பாக 23 படையினருக்கு எதிராக 83 குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன.

மார்ச் 4

* புதுவருடத்தில் 15,000 கிராமங்களில் (யாழ் குடாநாட்டின் சில பகுதிகள் உட்பட) மக்கள் வருமானத்தை உயர்த்தும் திட்டங்கள் நடைமுறைக்கு வரும் எனப் பிரேமதாசா அறிவிப்பு.

* சவர்க்கார உறைக்குள் 1,25,000 ரூபா பெறுமதியான கற்பூரம் கடத்தும் முயற்சி வவுனியாவில் முறியடிக்கப் பட்டதாக அரசு அறிவிப்பு. இதன் யாழ்ப் பெறுமதி 11,25,000 ரூபா.

* கடலில் பிடிபட்ட 'புலிகளி'ன் வழக்கில்

மார்ச் 8

* மாகாணசபைகள் ஒழிக்கப்பட மாட்டா, அவற்றுக்குத் தேர்தல் நிகழும் - அரசு

* யூனில் கிழக்கில் தேர்தல் நிகழும் விதத்தில், புலிகள் ஒழிக்கப் படுவர் - ராணுவ அதிகாரி ஒருவர்

மார்ச் 9

* புனர்வாழ்வு அமைச்சின் நடமாடும் செயலகத்தின் மட்டக்களப்பு விஜயத்தில் அகதிகள் குறைகள் தீர்க்கப் படாமல் ஏமாற்றம்

* மட்டக்களப்பில் புதிய ராணுவ நடவடிக்கை ஆரம்பித்தது

* சங்குப்பிட்டி வழியே உணவு கொண்டுசெல்ல அனுமதிக்கப் படலாம் என யாழ்ப்பாணப் பேச்சுகளில் முன்னேற்றம் - கொழும்புத் தினசரி

* நாம் ஆட்சிக்கு வந்தால் வானொலி, தொலைக்காட்சி பிபிஸியின் தரத்துக்கு உயாத்துவோம் - அத்துலத் முதலி

மார்ச் 12

* வடக்கு கிழக்கு இணைப்பில்லை,



www.tamilarangam.net

தனிச்சபைகள் - தெரிவுக்குழு முடிவு

* 1994 முடிவுக்குள் மின்சாரசபை தனியார் மயமாகும்

* வடக்குக்குச் செல்லும் உணவில் புலிகளிடம் செல்லும் உணவை அளவிட முடியவில்லை - (அரசு சார்பாக) பிரட்மன் வீரக்கோன்

மார்ச் 13

* கிளிநொச்சியிலிருந்து வவுனியா செல்ல செஞ்சிலுவைச் சங்க அம்புலன்சுக்கு ராணுவத்தால் அனுமதி மறுக்கப் பட்டதால் ஒரு பெண் உயிரிழப்பு

* கிழக்கு மாகாண விடுதலை முன்னணி எனப் புதிய கட்சி ஆரம்பிக்கும் நோக்கம் இல்லை - பிரின்ஸ் காசிநாதர்

* யாழ் கட்டடக் கொந்தராத்துக் காரரின் அமைப்பில், யுத்தத்தை நிறுத்திப் பேச்சுகளை நடத்தக்கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம்

மார்ச் 15

* பம்பாயில் குண்டுவெடிப்பு நிகழ்ந்தமைக்குத் தாம் பொறுப்பல்ல எனப் புலிகள் மறுப்பு

* இ.தொ.கா. உபதலைவர் ராஜ காலமானார்

* தம்பலகாமம் அகதிகளுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணையும் ஒரு தீப்பெட்டியும் கொண்டுசெல்ல பிரிகேடியர் அனுமதி

மார்ச் 16

* ‘தெரிவுக்குழு தீர்மானம் தமிழரையும் முஸ்லிம்களையும் திருப்திப் படுத்தவில்லை. அறிக்கையை முஸ்லிம் கொங்கிரஸ் நிராகரிக்கிறது. இனியாவது ஒன்றிணைந்த யோசனையை முன்வைப்போம்’ - அஷ்ரப்

* மட்டக்களப்பில் நவீன சந்தை அமைக்க நோராட் ஒருகோடி உதவி

* சிறிமா மீண்டும் மக்கள் நம்பிக்கையைப் பெறமாட்டார் - பிரேமதாசா

மார்ச் 17

* ஏழு மாகாணசபைகளும் கலைப்பு; விரைவில் தேர்தல்

* இலங்கையில் ஒருலட்சம் பேர் ஹெரோயின் பாவனை, 40,000 பேர் அதற்கு அடிமைகளாகி உள்ளனர்

மார்ச் 18

* கல்கத்தாவில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 50பேர்வரை உயிரிழப்பு

* நவசமசமாஜக் கட்சி தலைமையில், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த நாலம்சக் கோரிக்கையையும், தமிழரது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் புதிய அரசியற் கூட்டு உதயம்

* வடக்கு கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நிகழ்த்த கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி தேவை - தேர்தல் ஆணையாளர்

மார்ச் 19

* வடக்கே அனுப்பப்பட்ட 118கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களில் 16கோடி 60லட்சம் பெறுமதியான உணவைக் காணவில்லை

* சுதந்திரப் பத்திரிகை இயக்கம் கொழும்பில் அமைதியான சத்தியாக்கிரகம்

மார்ச் 20

* யாழ் வந்த 220 பொதி கடிதங்களில் 75% உறை கிழிந்தபடி வந்தன. இவை 4 மாதத்தின்பின்பே வந்தன.

* சிகிச்சைக்காக சிறிமாவோ மலேஷியா பயணம்

* கொழும்பு ஆயுர்வேத மாணவர் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக சித்தவைத்திய பீடத்தைச் சேர்ந்த நால்வர் நேரில் வந்து ஆதரவு

மார்ச் 21

* வடக்கில் படைகுவிப்பு, ஆனையிறவு மாதகல் விஸ்தரிக்க நடவடிக்கை என அச்சம்

* வவுனியாவில் கறுப்புடை, வெள்ளை வானில் வருவோரால் ஆட்கள் கடத்தப் படுவதாகச் செய்திகள்

* தமிழ் பா.உ.க்களின் வெற்றிடங்களை நிரப்புங்கள் - தினேஷ் (பா.உ)

மார்ச் 22

* மட்டு மாவட்டத்தின் பெரும்பகுதி ராணுவக் கட்டுப்பாட்டில் - பிரிகேடியர்

www.tamilarangam.net

www.tamilarangam.net

மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி88

சுவடுகள்

# தெரிவுக்குழுவின் நிர்வாணம்

புத்தர் நிர்வாண நிலையில் பரிபூரணநிலை அடைந்தார் எனச் சொல்லப் படுகிறது. பௌத்தத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இலங்கையில் இனப்பிரச்சனையைத் தீர்க்க என்று சொல்லி, அரசால் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தனது நிர்வாண நிலையை அண்மையில் எய்தியது.

இனவாத அரசு, இனப்பிரச்சனையை சமாதான வழியில் தீர்ப்பது என்பதே தனது நோக்கம் என்று காலம் காலமாக ஒப்பாரி வைத்துக்கொண்டே யுத்தத்தை நடத்திவரும் அதேவேளை, சர்வதேச ரீதியில் ஏற்படக்கூடிய அரசியல் அழுத்தங்களைக் கவனத்தில் கொண்டு சமாதானத்திற்கான தனது முயற்சியாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவைக் காட்டிவந்தது.

ஆளும் கட்சியோ, பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியோ இனப்பிரச்சனைக்குத் தீர்வு என எந்தத் திட்டத்தையும் முன்வைக்காமல், கொழும்புத் தமிழ்க் கட்சிகள் முன்வைத்த நான்கு அம்சத் திட்டத்தையும் கிடப்பில் போட்டுவிட்டு, இனவாதிகளது முடிவைத் தமிழ் மக்களின் பிரதிநிதியே அறிவிப்பதுபோல ஏற்பாடு செய்யப்பட்ட சிறினிவாசனின் சமஸ்டித் திட்டத்தை ஏற்பதாக அறிவித்துள்ளது. இதில் சமஸ்டியைவிட முக்கிய அம்சம், தமிழ் மக்களதும் தமிழ் அரசியல் அமைப்புகளதும் உறுதியான கோரிக்கையாக இருந்த வடக்கு கிழக்கு இணைப்பை இல்லாமல் செய்ததுதான்.

தமிழ் மக்களது விருப்பிற்கு மாறாக, ஏற்கனவே இணைக்கப் பட்டிருந்த வடக்கு கிழக்கைப் பிரிக்கும் சூழ்ச்சியைச் சுமுகமான தீர்வுக்கான வழி என அரசு அறிவித்து, அதை நடைமுறைப்படுத்த முயற்சிக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இது யுத்தத்தின் நிறுத்தமாக இராமல் நீட்சியாக இருக்கும் அபாயமே இப்போது உள்ளது.

தெரிவுக்குழுவின் இன்றைய நிலை எவருக்கும் நம்பிக்கை தருவதாக இல்லை. அடுத்தது என்ன என்ற கேள்வியே எல்லோர்

www.tamilarangam.net

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

மனதிலும் பெருத்த கேள்வியாக உள்ளது. பிரேமதாசா அரசைவிட்டால் வேறு யாரும் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்று கூறுபவர்களையும், தெரிவுக்குழுப் பம்மாத்து சோரச்

செய்துவிட்டது. புலிகளுடன் பிரேமதாசா நடத்திய பதின்மூன்று மாதகாலப் பேச்சுகளுக்குப் பின்பும், பிரேமதாசா அரசு

இனப்பிரச்சனையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையில் தங்களையும் தமிழ், முஸ்லிம் மக்களையும் பணயம் வைத்த கொழும்புத் தமிழ், முஸ்லிம் அரசியற் கட்சிகளுக்குத் தமது இனவாத முகத்தைப் பெரும்பான்மை அரசியற் கட்சிகள் காட்டியுள்ளன.

இனப்பிரச்சனை, சமாதான வழியில் தீர்க்கப்படும் எனக் காலம் காலமாக நம்பியிருந்த எவருக்கும் தெரிவுக்குழுவின் மரணம் கவலை தருவது. சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இனங்களுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்த நிகழ்ந்த அனைத்து முயற்சிகளும் கடைசியில் தோல்வியைத் தழுவியிருக்கின்றன. இப்படியான போக்குகளில் இன்னொரு தரம் ஏமாறாமல் எம்மைக் காப்பாற்றச் சரியான ராஜதந்திர அணுகுமுறைகள் அவசியம்.

இலங்கையின் பௌத்த சிங்கள ஜனநாயகத்திலும், பாராளுமன்றத்திலும் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள், துயரங்கள், இழப்புகள் மீண்டும் ஒருமுறை அர்த்தமிழந்துள்ளன. தமிழ் மக்களது ஆயுதம் ஏந்திய போராட்டத்திற்கு இன்னொரு தரம் அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது, தெரிவுக் குழுவின் மரணம்.

## வெளியேற்றமும் புதிய விளக்கமும்

முகவரி:
Herslebs Gate 43,
0578 Oslo

அண்மையில் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், 1990இல் விடுதலைப் புலிகள் வடக்கில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியது

www.tamilarangam.net

தொடர்பாக, "1990இல் அம்பாறையில் இனக்கலவரங்கள் மூண்டபோது பெருமளவு தமிழர்கள் கொல்லப் பட்டனர். யாழ்ப்பாணத்திலும் இந்தக் கலவரம் பரவும் அபாயம் இருந்தது. அந்நேரத்திலே தற்காலிகமாக யாழ்ப்பாணத்தைவிட்டுச் செல்லுமாறு முஸ்லிம்களை நாம் கேட்டுக் கொண்டோம். அவர்களின் பாதுகாப்புக்காகவே இதைச் செய்தோம். ஆனால், போர் முடிவடைந்து சமாதானம் திரும்பும்போது யாழ்ப்பாணத்துக்கு முஸ்லிம்கள் திரும்புவதை நாம் அனுமதிப்போம்" எனக் கூறியுள்ளார். இந்தக் கூற்று தமிழ் மக்களுக்குக் கவலை தந்தது. இதனால் வெளியுலகம் தமிழ் மக்களைக் கலகக்காரராகவோ வன்முறையாளராகவோ கருத இடமிருக்கிறது.

பிரபாகரனின் இந்தத் தகவலின் உண்மைபற்றிப் பலத்த கேள்வி உள்ளது. கடந்த காலத்தில் சுயாதீன செய்தி ஸ்தாபனங்கள் கூறுவது, புலிகளின் கூற்றுக்கு நேரெதிரானது. பிரபாகரன் கூறுவதுபோலவே இருந்திருந்தால் இன்றுவரை, புலிகள் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டது பற்றிய சரியான விளக்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய வாழிடங்களில் இருந்து பலவந்தமாகத் துரத்தப்பட்டு இரு வருடங்களுக்கு மேலாகியும், புலிகளின் எந்தச் செய்தியிலும் முஸ்லிம் மக்கள் வெளியேறுமாறு கேட்கப் பட்டார்கள் என்றோ, அதற்கான காரணமோ (பிரபாகரனால் கூறப்பட்டது போன்று) கூறப்படவில்லை.

புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் 24 மணிநேர உத்தரவுடன் தாம் வெளியேற்றப் பட்டதையும், தமது சொத்துகள் புலிகளால் அபகரிக்கப் பட்டதையும் கண்ணீரோடு இன்றும் சொல்கிறார்கள். அவர்களில் பலர் இப்போது பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அரசு முஸ்லிம் தலைவர்களைக் கவருமளவு, இந்த மக்களுக்கு எதையும் செய்யவில்லை. யுத்தம் அண்மையில் முடியும் என்ற நிலை இல்லாத சூழலில், அவர்களது எதிர்காலம் கேள்விக்கு குறியாக எல்லாத் தமிழ் மக்கள் முன்னும் நிற்கிறது.

உண்மையில் கலவரம் பரவும் அபாயம் யாழ்ப்பாணத்தில் இருந்தது என்று சொல்வதே தமிழ் மக்களைப் பற்றி இழிவுபடுத்தும் வார்த்தையே. மிகநீண்ட காலமாக ஒன்றாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வதற்கான சாத்தியமே இல்லை. அவ்வாறே

www.tamilarangam.net

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

இருந்திருப்பினும் அந்த நிலை ஏற்படாமல் தடுத்து முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு புலிகளுக்கு உண்டு; அதைச் செய்யும் வல்லமையும் அவர்களுக்கு உண்டு. கலவரம் ஏற்படும் அபாயம் இருந்திருப்பின், உடன் பாதிக்கப்படக்கூடிய இடங்களுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பை வழங்கி, இருபகுதிச் சமூகங்களின் தலைவர்களையும் இணைத்து இருபக்க நியாயங்களையும் புரியப்படுத்துவதுடன், சுமுகமான சூழல் ஏற்படுத்தும் வழிவகைகளையும் ஆராய்ந்து நடைமுறைப் படுத்தியிருக்க வேண்டும். இதை அப்போதேயே செய்திருத்தல் வேண்டும்; இனிமேலாவது அதைச் செய்யலாம். முஸ்லிம் மக்களது தனித்துவத்தைத் தமிழர்கள் அங்கீகரிப்பதாகவும், அவர்களுக்குத் தமிழ் மக்களால் பாதிப்பு ஏற்படாது என்ற உறுதியும் வழங்கப் பட்டிருக்க வேண்டும். இவற்றில் எவற்றையும் தமிழர்களான நாம் செய்யவில்லை. இலங்கை அரசு, அரசியற் தீர்வு என்று கூறியபடி ராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்துவது போன்றே இந்த நடவடிக்கையும் இருப்பதால் வன்முறைக்கு எதிரான தமிழர்களது உயர்பண்பாடு கேள்விக்குட்படுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ் முஸ்லிம்கள் மூலமாகவே கிழக்கிலங்கை முஸ்லிம்களை அணுகவும், கிழக்கில் முஸ்லிம் - தமிழ் மக்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்தவும் இருந்த சந்தர்ப்பத்தைப் புலிகள் நழுவவிட்டனர்.

முஸ்லிம் மக்களை வடக்கு கிழக்கில் பாரம்பரியமாக வாழும் மக்களாக தமிழ் மக்களும், அனைத்துத் தமிழ் அமைப்புகளும் அங்கீகரித்தல் அவசியம். ஏற்கனவே பலவந்தமாக அனுப்பப்பட்ட முஸ்லிம் மக்களை, உடன் நிபந்தனை இன்றி வடக்கே திரும்ப அழைக்க வேண்டும்; அவர்களது புனர்வாழ்வுக்கு உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களது அரசியற் சுதந்திரத்தையும் உறுதிசெய்தல் வேண்டும். இதனைப் புலிகள் செய்வதன் மூலம் மட்டுமே தமிழ் மக்களது போராட்டத்திற்கு ஏற்பட்ட கறையை நீக்கமுடியும்.

சுவடுகள் 44
பங்குனி'93

சுவடுகள்

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துருவச்சி

# எப்பொருள் யார்வாய்க் கேட்பினும்...



## புரியாத புதிர் 16
## என்ன தகுதி வேண்டும்?

நான் வந்து சில நிமிடங்களாகியும் கவிராயர் என்னைக் கணக்கில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஊரில மாதிரி சுற்றிவர தமிழ்ப் பத்திரிகைகளைப் பரப்பிப் போட்டு வைத்துக்கொண்டு நடுவில் குந்தி அதிலேயே மூழ்கியிருந்தார். ஏதோ மும்முரமாக ஆய்வு செய்வது மட்டும் புரிந்தது. ஏதாவது புரியாத விடயம் இருக்கும் என்பது மட்டும் புரிந்தது.

"என் கவிராயர், நான் வந்ததுகூடத் தெரியாமல் இருக்கிறீங்கள். அப்பிடி எந்தக் கோட்ஈடயைப் பிடிக்கப் போறியள்?" என்றேன்.

மூக்குக் கண்ணாடியை நிமிர்த்தி என்னைப் பார்த்துவிட்டு, "ஹா.... தம்பி இந்தக் காலத்தில கோட்டையைக்கூடப் பிடித்துவிடலாம். ஆனால் சில ஆக்களின்ர அறிவை எடை போடுறது சரியான கஷ்டம்...." என்றார்.

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்?" என்றேன்.

"இல்லை.... போனமுறை எங்கட பத்திரிகைகள் மற்ற ஆக்களின்ர, நாட்டின்ர விசயங்களை எண்டா அடிச்சுப் பிடிச்சுக்கொண்டு விமர்சிப்பினம். எங்கட ஆக்கள் ஏதும் பிழைவிட்டா ஒண்டுமே நடவாத மாதிரி, 'காக்காவின்ர நிறம் கறுப்பு', 'குயில் கூவும்' எண்டு கதைசொல்லிக் கொண்டிருப்பினம் எண்டு நான் சொன்னனில்லையா?"

"ஓமோம், அதுக்கு இப்ப என்ன?" என்றேன்.

"ஒரு ஆள் என்னட்ட வந்து.... 'யோவ் பத்திரிகைகளை விமர்சிக்க உமக்கு என்ன தகுதி தராதரம் இருக்கு' எண்டு கேட்டார்....." என்று நிறுத்திவிட்டுப் பிறகு தொடர்ந்தார்.

"ஏன் தம்பி ஒருவனுக்கு விமர்சிக்கிறதுக்கு என்ன தகுதி தராதரம் வேணும்? அறிவு இருக்கிறவன், அறிவுபூர்வமாகச் சிந்திக்கிறவன் ஒண்டை விமர்சிக்கக் கூடாதே. அப்படி அவன் விமர்சிச்சால் அவன்ர விமர்சனத்தின்ர 'கரு', விடயத்திலை அடிப்படைப் பிஈழ இருந்தால் அதுக்கு மாற்றுக் கருத்து வைக்கிறதுதானே முறை. அதுதானே அறிவாளர்களின்ர தார்மீகப் பொறுப்பு, பண்பு.?

நான் கேள்வி கேட்டரிட்டக் கேட்டன், 'தம்பி, நான் சொன்னதிலை ஏதாவது கருத்தில பிழை இருந்தா நீர் ஆதார பூர்வமாக கருத்தைச் சொல்லும். அதைவிட்டிட்டு தகுதி தராதரம் இருந்தாத்தான் விமர்சிக்கலாம் எண்டு சொல்லாதையும். எல்லாருக்கும் கருத்துச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லச் சுதந்திரம் இருக்கு. இது ஒவ்வொரு உயிரினதும் பிறப்புரிமை. இதில் நீதி நேர்மை, சரிபிழை பற்றித்தான் பிரச்சனை. நீதிநேர்மை எண்டைக்கும் ஒண்டுதான் இருக்க முடியும். இது ரெண்டு மூண்டெண்டு இருக்க முடியாது. எங்கட தேவைக்கு ஏற்றமாதிரி சுயநலத்துக்காக எங்கட பிழைகளை மறைக்கிறதுக்காக நீதி நேர்மையை மறைக்க, மாற்ற முடியாது.

நீதிநேர்மை பற்றிக் கதைக்கத் தகுதி தராதரம் இருக்கிற ஆககள்தான் கதைக்கலாம் எண்டால் உலகத்தில அப்பிடி யார் இருக்கிறார்கள்? என்ன தகுதி இருக்க வேணும் எண்டு கேட்டன். ஆள் போன இடம் தெரியேல்லை."

இதைக்கேட்டு நான் சிரித்தேன்.

"தம்பி இது சிரிக்கிற விசயமில்லை. சமையல்துறையில் ஒருவர் கலாநிதிப் பட்டம் பெற்றுப்போட்டு பத்திரிகை பற்றி ஒன்றுமே தெரியாவிட்டாலும், பிழையாக ஏதும் சொன்னாலும் அவர் சொன்னா அது சரியாகத்தான் இருக்கும் என்று மறுபேச்சில்லாமல், சரிபிழை பற்றிச் சிந்திக்காமல் ஏற்றுக்கொள்ற ஆக்கள் எங்களிட்ட நிறையப் பேர் இருக்கினம். ஆனால் ஒரு துறையில 'கடதாசிப் பட்டம்' இல்லாமல் அறிவாளிகள் பல துறைகளில இருக்கினம். அவையள் நூறுவீதம் சரியான கருத்துச் சொன்னாலும் அவனுக்குப் பின்னாலை, படிச்ச கடதாசிப் பட்டம் ஏதும் இருக்குதா, இல்லாவிட்டால் கடவுளாகக்கூட இருந்தாலும் நாங்கள் சரியான கருத்துகளை ஏற்றுக்கொள்ள மாட்டம் எண்டு அடம்பிடிக்கிற பலர் எங்கட சமூகத்தில இருக்கினம். அது ஏன் எண்டுதான் புரியேல்லை. கடதாசிப்பட்டம் இல்லாவிட்டாலும் அவையளையும் சமூகத்துக்குப் பயன்படுகிற விதத்திலை பயன்படுத்திறதாலைதான் மற்ற சமூகங்கள் முன்னேறுது" என்றார்.

"எப்பொருள் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.!" எண்டு குறள் எழுதின வள்ளுவர் என்ன 'குவாலி:பிக்கேஷன்' இருந்து எழுதினவர்? அவர் எந்த யூனிவசிற்றியிலை படிச்சவர்" என்றேன்.

## புரியாத புதிர் 17
## டைரக்டர் பாலுமகேந்திராவா?

"நீதி நியாயம், பத்திரிகை தர்மம் பற்றிச் சொல்லேக்கை இன்னொரு விசயமும் ஞாபகம் வருகுது" என்றார் கவிராயர்.

"என்ன சொல்லுங்கோ கவிராயர்..." என்றேன்.

"தமிழ்நாட்டிலை இருந்து புற்றீசல் மாதிரி ஏராளமான சஞ்சிகைகள் வெளிவருகுது... எல்லே?" என்று கேட்டார்.

"ஓமோம் அட்டையில குஷ்புவின்ர படமும் போட்டு குஷ்புவைப்பற்றி நிறைய எழுதுகினம்....." என்றேன்.

கவிராயர் சிரித்துவிட்டுத் தொடர்ந்தார்.

"அந்தப் பத்திரிகைகள்கூடப் பல விசயங்களிலை இப்பிடித்தான். கூப்பிடுதூரத்திலை இருக்கிற எங்கட நாட்டில இவ்வளவு கொடுமைகளும் துன்பங்களும் நடக்குது. அதுபற்றிக் கண்டுகொள்ளாமல், குஷ்புவுக்கு சின்ன விரல்லை உளுக்கு எண்டவுடனை வாரக் கணக்கில அது எப்படி வந்தது எண்டு ஆய்வுக் கட்டுரைகள் வருகுது பாருமன்.


"ஓமண்ணை, மூளையை மழுங்கடிக்கிறாங்கள் ......." என்றேன்.

"இதுமாதிரித்தான், சரி குஷ்புவைப் பற்றி ஆயிரம் பக்கம் எழுதிறவங்கள் இதுகளைப்பற்றி ஒரு பக்கமாவது

www.tamilarangam.net



எழுதினால் என்ன? அதைக்கூட விட்டாலும், தமிழ்நாட்டிலை கலை தொடர்பாக நடக்கிற நல்ல விசயங்களையாவது எழுதலாம், இல்லையா? எழுதாவிட்டாலும் இருட்டடிப்புச் செய்யாமல் இருக்கலாம் இல்லையா? உதாரணத்திற்கு தமிழில முதன்முதலா ஒரு நல்ல படம் எண்டா 'வீடு' படம்தான் எண்டு பல




விமர்சகர்கள் சொல்கிறார்கள். அந்தப் படத்தை எடுத்து, உலகரீதியில் தரமான படங்களைத் தமிழிலும் எடுக்க முடியும் எண்டு நம்பவைத்து, தமிழனின் பெருமையை நிமிரவைத்தவர் பாலு மகேந்திரா. இவர் இப்ப எடுத்த படம், 'மறுபடியும்'. மிக நல்ல படம். ஆனால் சில சஞ்சிகைகள் இதை ஒரு தரம் குறைஞ்ச படம் எண்டு எழுதுது. அஞ்சு நிமிசம்கூட குந்தி இருந்து பார்க்க முடியாத படங்களைத் தலையில தூக்கிவைத்துக் கொண்டாடுது, அப்பிடித்தான் சில டைரக்டர்களையும்.

தமிழிலை நல்ல கலைஞர்களுக்கு நிறையத் தட்டுப்பாடு உண்டு. அதுவும் சர்வதேச ரீதியில் தரமான படைப்புகளைத் தருகிற கலைஞர்கள் மிகக் குறைவு. இப்பிடிப்பட்ட நேரத்திலை, வாற ஒன்றிரண்டு கலைஞர்களையும் ஏன் இப்பிடி நடத்துகினம்? ஒருவேளை சர்வதேச ரீதியில் தமிழனுக்கும், தமிழ்ப் படைப்புகளுக்கும் நல்ல பெயர் வந்திடும் எண்ட கவலையோ?" என்று கேட்டார்.

எனக்குச் சரியான கவலையாக இருந்தது.


இவர் இலங்கையர் என்பதற்காகவா?


## ச.மோ.ரா.

இனவாதத்திற்கு எதிராகக் குரல தரும இருமாத இதழ். இனவாத எதிர்ப்பு மையத்தின் வெளியீடு.

ஆறு இதழ்களுக்கான சந்தா 100 குறோணர்கள். தொடர்புகளுக்கு:

SA.MO.RA,
Antirasistik senter,
Sentrum,
0109 Oslo.

www.tamilarangam.net

## நூறு வருடம்

பல்வேறு விளையாட்டுக்கள் எப்போது ஆரம்பமானது என்று கூறுவது கடினம். ஆயினும் உலக அளவிலான போட்டிகள் எப்போது தொடங்கியது என்று ஓரளவு கூறிவிடலாம். அந்த வகையில் செப்டெம்பர் 7ம் திகதியுடன் உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் போட்டி தொடங்கி 100 வருடங்கள் முடிந்துவிட்டன. முதன் முதலாக இந்த உலக சாம்பியன் விருதை (1892 இல்) ஜோன் சல்லிவன் தட்டிக் கொண்டார்.

- வீரன் -

## பொலிஸ் நீயுமா?

சர்வதேச மன்னிப்புச் சபையின் சமீபத்திய அறிக்கை ஐரோப்பாவின் பல நாடுகளில் பொலிஸ் துறையினர்

நிறவெறி அடிப்படையில் வெளிநாட்டவரைக் கையாள்வதாக விமர்சித்துள்ளது. இத்றகு உதாரணமாக கிரேக்க நாட்டில் கைதான துருக்கியர் ஒருவர், துருக்கியர் என்பதற்காக அவரது பிறப்புறுப்பும் பாதங்களும் நெருப்பில் சுடப்பட்ட சம்பவம் ஒன்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஒஸ்த்திரியா, டென்மார்க் பொலிசாரும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சாள்ஸ்

## அழிப்பு வேகம்!

உலகிலுள்ள மழைக்காடுகளின் அழிப்பு தற்போதுள்ள வேகத்தில் தொடர்ந்தால், இன்னும் ஐம்பது வருடங்களில் உலகில் மழைக்காடுகளே இருக்காது என ஐ.நா. அறிக்கை ஒன்றில் இருந்து தெரியவருகிறது.

ஒவ்வொரு வருடமும் இங்கிலாந்தினதும், வேல்சினதும் நிலப்பரப்பளவு மழைக்காடுகள் அழிக்கப் படுகின்றன. தற்போதுள்ள விலங்கு, தாவரங்களில் 90% மழைக்காடுகளிலேயே உள்ளன. மழைக்காடுகளின் அழிப்பு இத்தாவர, விலங்கினங்களுக்கு ஆபத்து விளைவிப்பது மட்டுமன்றி, 20கோடி மக்களுக்கும் இடப்பெயர்வை ஏற்படுத்தும்.

- இனியன் -


## விடுமுறையும் விவகாரமும்

இம்முறை கோடைகால விடுமுறையை அடுத்து 'டாக்பிளா(த)' பத்திரிகை நடத்திய ஒரு கணிப்பீடு நடத்தியது. பலர் தொலைபேசியில் தமது

அனுபவங்களைக் கூறினர். இவர்களில் அனேகர் பெண்கள். பொதுவாக விடுமுறைப் பயணத்தின்போது, கணவன் மனைவியிடையே சண்டை பிரிவினை அதிகமாவதாகவும் வன்முறையும் பிரயோகிக்கப் படுகிறது. சண்டையின்பின் குடிபோதையில் பெண்கள் தாக்கப்படுவதும், சிலர் பலாத்காரத்திற்கு உள்ளாவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது.

- சிவன் -

www.tamilarangam.net




## அத்தியாயம் 2

தயிலாப் பெட்டிக்குள் தனக்கெனப் போட்டு மூடி வைத்திருந்த சாப்பாட்டுத் தட்டை எடுத்துச் சாப்பிட முனைந்தான் ரூபன். "இந்தக் களிசான் சேட்டக் களற்றிப் போட்டுச் சாப்பிடலாந்தானே...? துரைக்கு என்ன அவசரம்?" என்று கிணற்றடியில் நின்று உள்ளே வந்த அம்மா சத்தம் போட்டாள்.

"தெரியாமச் செய்து போட்டனம்மா. இனிமேச் செய்யமாட்டனம்மா" என்பதுபோல ஓர் இரக்கம் யாசிக்கும் பார்வையால் அம்மாவை வேண்டிவிட்டு, சோற்றையள்ளிச் சாப்பிட முனைந்தான். ஏனோ அவனுக்கு உணவு உட்செல்லச் சங்கடப் பட்டது.

பாலனோடு இன்று குளத்திற்குப் போகாமல் விட்டால் திங்கட்கிழமை பாடசாலையில் எப்படி நடந்துகொள்வானோ தெரியாது. இதுவரை அடிக்காதவன் இனிமேல் அடித்தாலும் அடிப்பான். இன்று குளத்திற்குப் போய் அம்மாவிடம் பிடிபட்டால்.....? மீண்டும் முதுகுத் தோல் உரியும். வேண்டாம், குளத்திற்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டான். இந்த மாரியுடனாவது நீச்சல் பழகிவிட வேண்டும் என்ற அவனது ஆசை ஒருபுறத்தில் அரித்துக் கொண்டேயிருந்தது.

சாப்பிட்டு முடித்தவனுக்கு, அம்மா உடையணிந்து எங்கோ புறப்படுவதற்குத் தயாராவதும், அவனது ஒருவயதுத் தங்கை நிலாவுக்கு புதுச்சட்டை அணிந்து எங்கோ பயணத்திற்குத் தயாராவதும் தெரிந்தது. மாதத்தில் இரண்டொரு தடவைகள் அம்மா இப்படிப் புறப்படுவதுண்டு.

அம்மா செல்லக்குரலில் "தம்பி... நாங்க யாழ்ப்பாணம் போட்டுவாறம். தங்கச்சிக்குச் சுகமில்ல, டொக்டரிட்டக் காட்டீற்று வாறம். நீ குழப்படி செய்யாமல் மாமா வீட்ட போய் நில்லு. மாமியட்டச் சொல்லி வைச்சிருக்கிறன. நாங்க நாளண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை வந்திருவம், குழப்படி செய்யாமல் நிக்கவேணும் என்ன... என்ர குஞ்செல்லே.... இந்தா காசு"

அம்மாவும், அப்பரும் ஒவ்வொரு முறையும் யாழ்ப்பாணம் படத்திற்குப் போவதற்காகத் தங்கைக்குச் சுகமில்லையென்ற

www.tamilarangam.net

காரணத்தைச் சொல்லித்தான் புறப்படுவார்கள். ஒவ்வொரு முறையும் புறப்படும்போது ரூபனுக்கு அம்மா ஐம்பது சதம் கொடுத்துவிட்டுத்தான் போவாள். வழமைபோலவே அப்பரும் சற்று முன்னதாகவே புறப்பட்டு சந்திக்கடையில் சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டு, வைரவர் கோயிலடி பஸ்த் தரிப்பில் சென்று அம்மாவின் வருகைக்காகக் காத்து நிற்பார். தங்கையும் வழமைபோல புதுச்சட்டை அணிந்தவளாய் கைகளை அசைத்து, ஆரோக்கியமாகவே விளையாடிக்கொண்டு கிடந்தாள்.

அப்பர் பரலோகஞானி நல்ல உழைப்பாளி. அருகிலுள்ள கடற்கரைக்குச் சென்று மீன்பிடிப் படகுகளில் மீனை மொத்தமாகக் கூறி எடுப்பார். அவற்றை அதிலேயே வைத்து சில்லறையாகப் பிரித்து விற்பார். இரண்டு மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே அவரது வியாபாரம். ஆனால் குறைவில்லாத வருமானம்.

"பரலோகஞானி நல்ல உழைப்பாளி" என்பது ஊராரின் பேச்சு. வருமானம் முழுவதும் அம்மா கையிலேயே கொடுத்து விடுவார். ஐந்து ரூபாயானாலும், ஐம்பது ரூபாயானாலும் அம்மாவுக்கு ஒரு நாள்த்தான். சேமிப்புத் தன்மையற்ற அம்மா; அதற்கேற்றாற் போல இசைந்துபோகும் அப்பா.

இன்று வெள்ளிக் கிழமையாதலால் தோணிகளில் மீனை மிகவும் மலிவாகவே வாங்கலாம். ஆனால் சில்லறையாக வியாபாரம் செய்பவர்கள் பேரம்பேசி எப்படியாவது அதிகமாக விற்றுவிடுவார்கள். இன்று அப்பருக்கு நல்ல வருமானம் கிடைத்திருக்க வேண்டும்.

வழமையாகவே கூடுதல் வருமானம் கிடைத்துவிட்டால் அம்மா, அப்பர் இருவரிலுமே வெளிப்படையாக அது தெரியும். விதவிதமாய் சாப்பாகள் செய்வாள் அம்மா. ஐந்தாறு கறியோடு சமையல் நடக்கும்; அப்பர் பைக்கட்டாக சிகரெட் வாங்குவார், யாழ்ப்பணத்துக்குப் படத்துக்குப் போவார்கள்.

"இண்டைக்கு அப்பருக்கு நல்ல வருமானம்போல கிடக்கு. அதுதான் ரெண்டுபேரும் படத்துக்குப் போகினம்" தன்னுள் நினைத்தவனாய் அம்மா கொடுத்த ஐம்பது சதக் குற்றியை காற்சட்டைப் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான். ரூபனின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. வெளிக்காட்ட முடியாத பூரிப்பு அவனுள்.


அம்மாவும் அப்பரும் வெளியூர் போகும் சமயங்களில் ரூபனுக்கு ஒரே கொண்டாட்டம்தான். தன் இஷ்டத்திற்கு எங்கு வேண்டுமானாலும் போய் விளையாடலாம். மாமா வீட்டிலும் க்கட்டுப்பாடுகள் கிடையாது. மாமாவின் மகன் சாந்தன் வீட்டிற்கு ஒரே பிள்ளையென்பதால் அவனுக்கு நிறைய சலுகைகளும் சுதந்திரமும். சாந்தன் கடலுக்கெல்லாம் போவான். பாலனோடு அவன் நல்ல பழக்கம். அவர்கள் இருவரும் ஒன்றாய்த்தான் திரிவார்கள். ஒன்றாய்க் குளத்திற்குப் போவார்கள். சாந்தனுக்கு நீச்சல் பழக்கியதும் பாலன்தான். சாந்தன் இப்போது ஒரு குட்டித் தொழிலாளி. போன வருடத்திற்கு முந்திய வருடமே அவன் பாடசாலைக்கு முழுக்குப் போட்டவன். படிக்க விருப்பம் இல்லையென்பதால், அருளப்பு மாமா அவனைப் பாடசாலையால் நிறுத்திவிட்டார். கடற்கரைப் பெரிய பாலத்தில் நின்று தூண்டில் போட்டு மீன்பிடித்து, ஒன்றரை இரண்டு ரூபாய்கள் உழைத்துவிடுவான்.

அவன் இப்பேது காற்சட்டை போடுவதில்லை, சாரம்தான் கட்டுவான். ரூபன் தனது தாய்தந்தையர் யாழ்ப்பாணம் போனபின் சாந்தன் வீட்டில் தங்கும்போதெல்லாம் நண்டு பிடிப்பதற்காக கடலுக்கும், ஈச்சம்பழம் ஆய்வதற்காக கண்ணா ஓடைக்காட்டிற்கும்,

www.tamilarangam.net

இளநி பிடுங்கக் கண்ணகை அம்மன் கோயிலடிப் பக்கம் என்றெல்லாம் சாந்தன் கூட்டிச் செல்வான்.

"சாந்தன் சுதந்திரமானவன்; அம்மாவும் அப்பரும் வெளியூர் போனால் நானும் சுதந்திரமானவன்" என்பது ரூபனின் எண்ணம். "இந்தச் சனிஞாயிறு எப்பிடியாவது பாலனோட குளத்துக்குப் போய் நீந்தப் பழகிப்போட வேணும்" என்று தன்னுட் கணக்கிட்டுக் கொண்டிருந்தவனை "அப்பன் தங்கச்சியை ஒருக்காப் பிடி ராசா" என்றது அம்மாவின் குரல்.



தங்கை நிலாவை ரூபன் வாங்கிக்கொள்ள, அம்மா தலை வாருவதற்காகக் கண்ணாடிமுன் சென்றாள். இரண்டு மூன்றுநாள் தங்கையைப் பார்க்க முடியாதென்ற ஏக்கம் அவனுள் பிராண்டியது. தங்கையை இறுகத் தழுவி, இரு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டபோது, இரண்டு குட்டிப் பற்களும் தெரிய எக்காளமிட்டுச் சிரித்தாள் நிலா. அப்படிச் சிரிப்பது அவனுக்குப் பிடித்திருந்தது. மீண்டும் மீண்டும் கழுத்திடையில் கொஞ்சினான். தங்கை நிலா சிரித்துக் களைத்தவளாய், மூச்சு வாங்கியபடி அண்ணனின் முகத்தையே பார்த்திருந்தாள். அவளைத் தன் நெஞ்சோடு இறுக அணைத்தபடி, அவளது பிஞ்சுக் கையெடுத்துக் கொஞ்சினான். நிலா தனது மறுகையால் அண்ணனின் கன்னத்தில் தாளம் தட்டிக் கொண்டிருந்தாள். தலைவாரி

www.tamilarangam.net

முடித்து வந்த் அம்மா முந்தானையைச் சரிசெய்தபடிக்கு அவனிடமிருந்து நிலாவை வாங்கினாள். வழமையைவிட தங்கையைப் பிரிவது சற்றுக் கடினமாயிருந்தது அவனுக்கு.

"தங்கச்சிக்குச் சுகமில்லையெண்டு இவயள் ஏன் சாட்டுச் சொல்லிப்போட்டுப் படத்துக்குப் போகவேணும்....? இவயளட பொய்யளக் கண்டுபிடிக்கிற வயசு எனக்கின்னும் வரயில்லயண்டுதானே நினைச்சுக் கொண்டிருக்கினம். பாலனுக்குப் பதின்மூன்று வயது; அவனைவிட எனக்கு மூண்டு வயசுதானே குறைவு? சாந்தனுக்கும் பதின்மூன்றுதானே. அவன் ஒம்பது வயசிலயே பாலனிட்ட நீந்தவும், மரமேறவும் பழகினவன். எனக்கிப்ப பத்து முடிஞ்சு பதினொண்டும் தொடங்கப்போகுது. ஏன் இவயள் என்னை அடக்கி வைச்சிருக்கினம்....?" ஒரு கையில் தங்கை நிலாவையும், மறு கையில் செருப்பையும் தூக்கிக் கொண்டு முற்றத்து வெள்ளத்தில் நடந்து செல்லும் அம்மாவைப் பார்த்தவண்ணம் தனக்குள் இந்தக் கேள்விகளைக் கேட்டுப் பொருமிக் கொண்டிருந்தான் ரூபன்.

அருளப்பு மாமா வீட்டுத் தகரப் படலையைத் திறந்து உள்ளே சென்ற ரூபனைக் கண்டதும் தாழ்வாரக் குந்தின் மேல்வளையில் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்த கூட்டின்மேலிருந்து "கிக்கிக் கீ..." என்று ரதி கத்தியபடி வரவேற்றது. ரதி ரூபனோடு நல்ல பழக்கம். அஅவனுடைய தோளில், தலையில் எல்லாம் ஏறிக் குந்தியிருக்கும். ரூபனோடு நல்லாச் சேரும். ரூபன் மாமா வீட்டுக்கு வரும்போதெல்லாம் ரதிக்கு வாழைப்பழம் வாங்கிக்கொண்டு செல்வான். ரதிக்கு இரண்டு வயதாகிவிட்டது. ரதியின் கழுத்தில் விழுந்துள்ள இரட்டை ஆரம் அதுக்கு நல்ல வடிவு.

ரதி, மாமா வீட்டுப் பூனை நாயுடனெல்லாம் நல்லாச் சேரும். மாமா வீட்டுப் பூனையும், நாயும் ரதியை ஒன்றும் செய்யாது. இதை நினைக்கும் போதெல்லாம் ரூபனுக்குத் தங்கள் வீட்டு ரொமிமீது கோபம் கோபமாய் வரும். ராசகண்டன் பனங்கூடலுக்குள் ஒரு பட்ட பனையில் இருந்துதான் ரதியையும், ராகினியையும் சாந்தன் பிடித்துக் கொண்டு வந்தான். அவைகளைக் கொண்டுவரும்போது சிறகுகள்கூட முளைக்காத சரியான சின்னக் குஞ்சுகள். ரதியைத் தான் வைத்துக்கொண்டு, ராகினியை ரூபனுக்குக் கொடுத்தான் சாந்தன். அதுவும் பலகையால் கூடு செய்து, தண்ணீர் சாப்பாடு வைக்க ரின்பால்ப் பேணி இரண்டை அளவாக வெட்டி உள்ளே பொருத்தி, அந்தக் கூட்டினுள் ராகினியை வைத்துக் கொடுத்தான். ரதி, ராகினி என்று பெயர்கள் வைத்ததும் சாந்தன்தான். ரூபன் வீட்டில் ராகினி நன்றாகத்தான் வளர்ந்து வந்தது. சிறகுகள் முளைத்து, ஓரளவு தத்தித் தத்திப் பறக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்துவிட்டது.

ஒருநாள், ராகினியைப் பிடித்து வெளியே விட்டுவிட்டு, கூட்டைத் துப்பரவு செய்து கொண்டிருந்தான் ரூபன். அப்போதுதான் ரொமி பாய்ந்துவந்து ராகினியின் கழுத்தில் ஒரே கவ்வலாய்க் கவ்வித் தூக்கியது. "கிக் கிக்... கீ...." என்ற ராகினியின் குரல் கேட்டுத் திரும்பியவன் "ரொமி... ரொமி.... உஞ்சு..." என்று அலறியடித்து, எழுந்து செல்வதற்குமுன் தன் வாயிலிருந்த ராகினியை ரொமி ஒரே உதறல். ராகினியின் மூச்சு நின்று குரல் மறைந்தது. கழுத்தில் இரத்தம் கசிய, இறந்துபோய்க் கிடந்த ராகினியைக் கிணற்றடிக்குக் கிழக்குப் பக்கமாய் உள்ள முருங்கையின் கீழ்ப் புதைத்தான். மூன்று நான்கு தினங்களாய் ராகினியை நினைத்துக் கவலைப் பட்டான். ராகினி செத்ததிலிருந்து இவன் ரொமிக்குச் சாப்பாடு வைப்பதேயில்லை. இவனுக்கருகில் ரொமி இப்போது வருவதுமில்லை. தூரத்தில் நின்று சும்மா

www.tamilarangam.net

தமிழ்நாதம்

இனவாத எதிர்ப்பு மையத்தின் ஆதரவில் ஞாயிறுதோறும் மாலை ஆறுமணிமுதல் ஏழுமணிவரை பண்பலை வரிசை (FM) 101.1இல் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி. தொடர்புகள்: Thamilnaatham, Radio Tellus, Post boks 244, 0103 Oslo

சம்பிரதாயத்திற்காக வாலை ஆட்டும், அவ்வளவுதான்.

படலையைத் திறந்து உள்ளே சென்ற ரூபன் தான் கொண்டுசென்ற வாழைப்பழத்தை உரித்து ரதியிடம் நீட்டினான். கூட்டின்மேலே நின்ற ரதி, ஒரே தாவலாக அவனது கையில் வந்து அமர்ந்துகொண்டு வாழைப்பழத்தைத் தனது வளைந்த அலகுகளால் கிராந்திக் கிராந்தித் தின்றது.

"எப்பயடா வந்தனி?" கோடிப்புறத்தில் நின்று வந்த சாந்தன் ரூபனைக் கேட்டபடி வாயிற்படித் திண்ணையில் வந்தமர்ந்தான். ரூபன் கூட்டைத் திறந்து ரதியை உள்ளே விட்டுவிட்டு, மீதி வாழைப்பழத்தையும் உள்ளே வைத்தபடி "இப்பதான்ரா வந்தனான்" என்றான். "உனக்குத்தான் ரெண்டு தேங்காயொல்லி எடுத்துக் கட்டி வைச்சிருக்கிறன். நீ இண்டைக்குக் குளத்துக்கு வாறதெண்டு பாலன் சொன்னவன், நீ நீந்தப் பழகிறதுக்குத்தான் ஒல்லிமிதப்புச் செய்துபோட்டு வாறன்" என்றான் சாந்தன்.

இவர்கள் தங்களோடு தன்னையும் இணைத்துக் கொள்வதில் இவ்வளவு ஆர்வமாய் இருக்கிறார்கள் என்பதை எண்ணித் தனக்குள் வியந்தபடி வாயிறபடி மறுபக்கத் திண்ணையில் சாந்தனுக்கெதிராய் அமர்ந்து கொண்டான் ரூபன். பாதி வாழைப்பழத்திற்கு மேல் தின்றுவிட்டு "கர்ட்...... கர்ர்றா...." என்று கரகரத்த குரலில் தனது நன்றியைத் தெரிவித்தது ரதி. இருவரும் சிரித்துக் கொண்டனர். மீண்டும் ரதி, "கர்ரக்.... கீக்..." என்றது. "அது வெளியிலை வரப்போகுதாம்" ரதியினுடைய பாஷையைப் புரிந்துகொண்டவன் போல கூறியபடி சாந்தன் எழுந்து சென்று கூட்டின் கதவைத் திறந்துவிட்டான். ரதி வெளியே பறந்துசென்று, முற்றத்திலுள்ள வேம்பில் அமர்ந்துகொண்டது. ரதியின் செய்கைகளையே கவனித்துக்கொண்டிருந்த ரூபனைப் பார்த்து, "இந்தமுறை உனக்கொரு கிளி பிடிச்சுத் தாறன்" என்றான் சாந்தன். "ம்..." என்றபடி சாந்தனைப் பார்த்துப் புன்னகைத்தான் ரூபன்.

"தென்னங்கிளியெண்டால் கெதியாப் பேச்சுப் பழகியிரும். மணியன்ர தோட்டத்துக்க ரெண்டு மூணு பட்ட தென்னையள் நிக்குது. இந்தமுற கட்டாயம் அதில கிளி தங்கும். உனக்கு நல்ல குஞ்சுக் கிளியாப் புடிச்சுத் தாறன். இனியெண்டாலும் நாய் பூனையட்டக் குடுக்காமல் கவனமாகப் பார்" அறிவுரை கேட்பவன்போல சாந்தன் சொல்வதை சம்மதப் புன்னகையோடு கேட்டுக் கொண்டிருந்தான் ரூபன்.

தகரப் படலையில் தட்டிச் சத்தம் கேட்கவே இருவரும் பார்வைகளைத் திருப்பினர் படலைப் பக்கம். அங்கே பாலன் "குளத்துக்குப் போகலாமா" என விழிகளால் வினவியபடி நின்றுகொண்டிருந்தான்.

"பாலன் வந்திட்டான், நீ போய் அவனோட வெளியில நில்லு. நான் ஒல்லிமிதப்பு எடுத்துக்கொண்டு வாறன்" சொல்லிக் கொண்டே சாந்தன் கோடிப்புறம் போனான்.

(தொடரும்)

www.tamilarangam.net

# இடம் வலம் சிதம்பரம்



(*Tegning: Pål Hansen*)

நோர்வேயில் இடதுசாரிக் கொள்கைகள் உடையவர்கள் பற்றி (அரசியல்வாதிகள், சாதாரண மக்கள்) அண்மையில் ஒரு கருத்துக் கணிப்பீடு நடத்தப் பட்டது. இந்தக் கணிப்பீட்டில் இவர்கள் பற்றி வெளியான சில சுவையான தகவல்கள்:

* உயர்கல்வி கற்றவர்கள், அதிக பணத்தை நூல்கள் வாங்கச் செலவு செய்வோர்.

* அனேகமாக எல்லாவகை இசையிலும் ஆர்வம் உடையவர்கள்

* இவர்களது முக்கிய அரசியற் கருத்தாக இருப்பது, (இவர்கள் முதலிடம் கொடுப்பது) சூழல் பாதுகாப்பு. இதனால் இவர்களில் பலர் புகைத்தல் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை. அதேநேரம் இவர்கள் பாவித்த பற்றரி, பெயின்ற் போன்ற சூழலுக்கு ஆபத்தான பொருட்களை, சாதாரண குப்பைகளான இயற்கைக் கழிவுகளுடனேயே போட்டுவிடுவர்.

* அயலவர்களுடன் நல்ல தொடர்புகளைப் பேணுபவர்கள்

* அதிகம் வெளியே திரிபவர்கள். கொக்கோ பருகுபவர்கள். பழங்களை அதிகம் உண்பவர்கள். பொல்சரை (sausage) விலக்கி வைப்பவர்கள்.

* வெளிநாடுகளுக்கு உல்லாசப் பிரயாணம் செய்வது குறைவு

* நோர்வேயில் தொலைக்காட்சி பற்றிய இவர்களது அபிப்பிராயம், பறவாயில்லை என்பதாகும்.

* இவர்கள் தமக்கென ஆயுள்க் காப்புறுதிகளைச் செய்து கொண்டிருப்பவர்கள்.

- கமலன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நேர்முகம்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு என முகவரியிடப்பட்ட, ஒரு பகிரங்கக் கடிதம் ஒன்று சுவடுகளின் முகவரியை வந்தடைந்தது. ஐரோப்பிய நாடுகளில் ஒன்றிலிருந்து அனுப்பப்பட்டிருந்த இக்கடிதத்தைச் சுவடுகள் பிரசுரிக்க முடியாமல் உள்ளது. காரணம் இக்கடிதத்தில் எழுதியவர் பெயர், முகவரி போன்ற விவரங்கள் தரப்படவில்லை. இது எல்லா வாசகர் கடிதத்திற்கும் அவசியமாகும். இவ்வாறு முழுப்பெயர், முகவரி இல்லாமல் வரும் கடிதங்களை எந்தப் பத்திரிகையும் சஞ்சிகையும் பிரசுரிக்க மாட்டாது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்வீர்கள் என நம்புகிறோம். புனைபெயரில் எழுதுவதற்குரிய உரிமை வாசகர்களுக்கு உள்ள அதேவேளை, அவர்கள் தமது முழுப்பெயர், முகவரியைச் சுவடுகளுக்கு அனுப்புதல் அவசியமாகும். அவ்வாறு விவரங்களைக் கொண்டிராத கடிதங்கள் எக்காரணம் கொண்டும் பிரசுரிக்கப்பட மாட்டா.

சுவடுகளுக்கு வாசகர்கள் கடிதம் எழுதுகையில், அவை பிரசுரிக்கப்படக் கூடாது எனில் தயவுசெய்து அதைக் குறிப்பிடவும். விமர்சனக் கடிதங்களை எழுதுவோர் தயவுடன், சுவடுகளில் வெளியாகும் கருத்துகள் பற்றிய விமர்சனங்களையே முன்வையுங்கள். தனிநபர் பற்றிய விமர்சனங்களைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

பலரது சந்தா இதுவரை வந்துசேரவில்லை. இதுவரை சந்தா செலுத்தாதவர்கள் தயவுசெய்து உடன் சந்தாவைச் செலுத்தி உதவுங்கள். சந்தா எப்போதும் வங்கியூடாக மாத்திரமே செலுத்தப்பட வேண்டும். வங்கிக் கணக்கிலக்கம் 16075213062, வங்கியின் பெயர் **Sparebanken NOR**. எமது முகவரி:**'SUVADUGAL', Herslebs Gt 43, 0578 Oslo, Norway.** புதிய சந்தாக்களைச் சேகரிப்பதில் வாசகர்களின் உதவிகள் வரவேற்கப் படுகின்றன.

சுவடுகள் பற்றி வெவ்வேறிடங்களில் வெவ்வேறு விதமாகக் கதைப்பதைக் காட்டிலும், அதை எழுத்து வடிவில் முன்வைத்தால், சுவடுகளில் அதைப் பிரசுரிக்கும்போது வாசகர்களால் உண்மைநிலை பற்றி அறியமுடியும். உங்கள் கருத்துகள் சுவடுகளுடன் எத்தனைதூரம் முரண்படினும், அவை நாகரிகமாக எழுதப்படும் பட்சத்தில் அவை பிரசுரமாகும் என நீங்கள் நம்பலாம்.

சுவடுகளுக்குப் படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப் படுகின்றன. படைப்புகள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் அமைதல் நலம். படைப்புகளை அனுப்புமுன், அவற்றில் இருக்கக்கூடிய எழுத்து, வசன, கருத்துப்பிழைகளைச் சரிசெய்துவிட்டு அனுப்புங்கள். இது எமக்கு உதவியாயிருப்பதுடன், தெளிவான, குழப்பமில்லாத படைப்புகளை வாசகர்கள் பெறவும் உதவும். சுவடுகளில் ஆகக்கூடியது ஐந்து பக்கங்கள் வருமாறு உங்கள் படைப்புகள் இருப்பது நல்லது. சிறுகதைகள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.



அன்புடன்,
சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனந்திறத்தல் மனந்திறத்தல் மனந்திறத்தல்

### சந்தா

சுவடுகளின் சந்தாதாரர்கள் பலர் தமது முகவரி மாற்றத்தை உரிய காலத்தில் அறிவிப்பதில்லை. இதனால் உங்களுக்குரிய பிரதிகள் தவறிப்போக வாய்ப்புண்டு. தயவுசெய்து முன்கூட்டியே முகவரி மாற்றம் பற்றி எழுத்து மூலம் அறிவியுங்கள்.

### படைப்புகள்

சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகளை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். ஆக்கங்கள் சமுகத்திற்குப் பயன் விளைக்கும் துறைகள் சார்ந்ததாய் இருப்பது விரும்பத்தக்கது. தவிர்க்கமுடியாத காரணங்களால் பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை. படைப்பாளிகள் தம்முடன் படைப்பின் பிரதியை வைத்திருக்க வேண்டுகிறோம்.

### தொடர்புகள்

சுவடுகளின் வளர்ச்சியில் வாசகர்கள் விமர்சனரீதியாகப் பங்களிக்க வேண்டுகிறோம். சுவடுகள் பற்றிய உங்களது அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள். நாகரீகமாக எழுதப்படும் கடிதங்கள் பிரசுரிக்கப்படும். இடவசதியைக் கருத்திற் கொண்டு கடிதங்களை முழுமையாகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

### நிறைவு

இத்தனை காலத்திலும் எம்மோடு தோள்கொடுத்த வாசகர்களையும், படைப்பாளிகள் மற்றும் நண்பர்களையும் நன்றியோடு நினைவுகூர்கிறோம். இதுவரை வெளியான இதழ்களில் உள்ள குறைகளையும் நிறைகளையும் தெரிவியுங்கள். புதிதாகச் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் என நீங்கள் கருதுபவற்றையும் குறிப்பிட்டு எழுதுங்கள். தொடர்ந்தும் சுவடுகளைத் தரமாக்க உங்களது ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

### முகவரி

சுவடுகளை உங்கள் நண்பர்களிடம் அறிமுகம் செய்யுங்கள். புதிய சந்தாதாரர்களைச் சுவடுகளுக்கு அறிமுகப் படுத்துங்கள். சுவடுகளைப் பரவலாக்க உங்களது ஒத்துழைப்பு பெரிதும் உதவும்.

### விமர்சனம்

சுவடுகள் வாசகர்கள் பலரது சந்தா கிடைக்கவில்லை. இதைப்பற்றி அடிக்கடி நினைவுபடுத்த நேரிடுவது கவலைதான். ஆனால் எமது நிதி நெருக்கடியை நீங்களும் கவனத்தில் கொள்வீர்கள் என நம்புகிறோம். பன்னிரு இதழ்களுக்கான சந்தா 300 நோர்வேஜியக் குறோணர்கள் (அண்ணளவாக 50 டொலர்கள்). வங்கியூடாக மாத்திரம் பணத்தை அனுப்புங்கள். வங்கிக் கணக்கிலக்கம் 1607 5213062, வங்கியின் பெயர் SparebankenNOR.

சுவடுகளுடனான சகல தொடர்புகளுக்கும் பின்வரும் முகவரியையே பாவிக்கவும்.


Herslebs Gate 43,
0578 Oslo,
Norway.



SUVADUGAL,
A Tamil Monthly from Norway, Issue nr44, Marc


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்